இலவசப் பிரதி

Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 9 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 19 (24.12.2002) செவ்வாய்க்கிழமை இதழ் : 84

Soft View Computer Systems
For all your Computer Requirements
Computer Assembling & Sales
Maintenance, Repairing & Networking
Monitors, Printers, Scanners & UPS Repairing
Software Installations
CD Writing & Printing
No.778, Thaddatheru Junction,
K.K.S Road,
Jaffna,
Sri Lanka
(சி-254)
☎-021-2225170

# சமஷ்டிக்கான அதிகாரங்கள் அடுத்தகட்ட பேச்சில் ஆராய்வு

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

**அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெறவுள்ள அடுத்தகட்டப் பேச்சுக்களின்போது, கடந்த பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட சமஷ்டித்தீர்வின் அதிகாரப் பரவலாக்கங்கள் குறித்து ஆராயப் படவுள்ளதாக நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.**


அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெறவுள்ள 4 ஆம் கட்டப் பேச்சு வார்த்தைகள் - 6 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதிவரை தாய்லாந்தில் நடைபெறும் என அமைச்சரவையின் பேச்சாளரான அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நான்காம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது மத்திய அரசாங்கத்துக்கும் பிராந்திய அரசுக்கும் இடையிலான அதிகாரப் பரவலாக்கம் மற்றும் பகிரக்கூடிய அதிகாரங்களின் அளவு குறித்தும் ஆராயப்படவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் மத்திய அரசாங்கத்துக்குள் அதிகாரங்களை பகிர்ந்து கொள்வது குறித்தும் ஆராயப்படவிருப்பதாகவும் -

மேலும் - மனித உரிமைகள், மற்

(10 ஆம் பக்கம் பார்க்க)



## விண்ணாணம் விநாசியர்

எதையும் எதிர்க்கிறதையே இவையள் குத்தகைக்கு எடுத்திட்டினம்...

# நோர்வேயைக் கண்டித்து ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்!

## சந்திரிகாவிடம் மகஜரை கையளிப்பர்

(கொழும்பு)

நோர்வே அரசாங்கத்துக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையிலும், தூதுவர் வெஸ்ட்பேர்க்கை வெளியேற்றக்கோரியும் - ஜே.வி.பி. இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளது.

வோட் பிளேஸில் உள்ள நோர்வே தூதரகத்திற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டப்பேரணி ஆரம்பமாகும்.

புலிகளுக்கு வானொலி உபகரணங்களை வழங்கியதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும், பேச்சுவார்த்தைகளில் நோர்வே அரசாங்கம் நடந்துகொள்ளும் முறைகளுக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையிலும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படவுள்ளது.

நோர்வே தூதரகத்தில் இருந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வெஸ்ட்பேர்க்கை நாடுகடத்துமாறு பிக்குமார்கள் கொழும்பில் பேரணி

(கொழும்பு)

நோர்வேத் தூதுவர் வெஸ்ட் பேர்க்கை நாடுகடத்துமாறு கோரி, தேசிய பிக்குகளின் முன்னணி நேற்று பேரணி ஒன்றை கொழும்பில் நடத்தியுள்ளது.

இப்பேரணி, கொழும்பு நோர்வே தூதுவராலயம் முன்பாக ஆரம்பித்து ஜனாதிபதி செயலகம் முன்பாக முடிவடைந்தது.

இப்பேரணியில் நூற்றுக்கும் மேற்பட்ட பிக்குகள் கலந்து கொண்டனர்.

இலங்கையின் உள் விவகாரங்களில் நோர்வேத் தூதுவர் தலையிடுகிறார் என்று பேரணியை நடத்தியோர் குற்றஞ்சுமத்தினர்.

பேரணியின் இறுதியில் ஜனாதிபதியின் செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## கல்வி அமைச்சர் யாழ்.வருகிறார்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சர் டாக்டர் கருணாசேன கொடித்துவக்கு எதிர்வரும் 28ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவிருக்கும் வைபவம் ஒன்றிலும் இவர் பங்குபற்றவுள்ளார்.

(க)

## 'Z' புள்ளிகள் வெளியானது

கடந்த ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர (உயர்தர) பரீட்சையின் பெறுபேறுகளுக்கிணங்க, 2002-2003 பல்கலைக்கழக ஆண்டுக்கான 'Z' வெட்டுப்புள்ளிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே
மாவட்ட ரீதியாக 'Z' புள்ளிகள் விபரம்

# ஏ-9 வீதி புனரமைப்புக்கு கிளிநொச்சியில் ஒப்பந்தம்

## திருத்த வேலைகள் ஜனவரியில்

(கிளிநொச்சி)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன், ஏ-9 வீதியை புனரமைப்புச் செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்று, நேற்று கிளிநொச்சியில் கைச்சாத்திடப்பட்டது.

வவுனியா விளக்குவைத்த குளத்திலிருந்து, யாழ்ப்பாணம் வரையிலான - 103 கிலோமீற்றர் நீளமான மேற்படி வீதி, இந்த ஒப்பந்தம் மூலம் திருத்தியமைக்கப் படவுள்ளது.

அறுநூறு மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ள மேற்படி புனரமைப்பு வேலைகளை முன்னெடுப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

நேற்றுக்காலை கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெற்ற வைபவத்தின்போது, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜோன் கூனியும் வீதி அபிவிருத்தி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நிரந்தரமான சமாதானத்திற்காக அமைதியைப் பயன்படுத்துவோம்

## யாழ்.ஆயரின் நத்தார் செய்தி



(யாழ்ப்பாணம்)

போரின் பின், நிரந்தர சமாதானத்திற்கு முன், ஏற்பட்டுள்ள இந்த இடைக்கால அமைதிக்காலத்தை உரியவிதமாக நிரந்தர சமாதானத்தை நோக்கி நகர்த்திச் செல்வது, சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரினதும் கடமையாகும். இன்றைய சமாதான சூழலுக்கு வழியேற்படுத்திய இறைவனுக்கு நன்றியுடையவர்களாக இருப்போம். சமாதானம் ஏற்பட உழைத்த பிரதமர் ரணில், விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், நோர்வே தரப்பினர் ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்கள். இவ்வாறு நத்தார் தினத்தையொட்டி யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் விடுத்த நத்தார் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த பல வருடங்களில் இல்லாத மகிழ்வும், நிறைவும் இவ்வாண்டு ஆண்டவர் இயேசுவின் மாபெரும் பிறப்பு விழாவைக் கொண்டாடும்போது எமக்குக் கிடைத்திருப்பது உண்மையிலேயே இறைவனின் பேருளாகும். யுத்த மேகங்கள் அகன்று போரின் கொடூரங்கள் முடிந்து அமைதியும் சமாதானமும் துளிர்விட்டுள்ள வேளையில் ஆண்டவர் இயேசு வியத்தகு ஆலோசகராகவும், வலிமை மிகுந்த இறைவனாகவும், என்றுமுள்ள தந்தையாகவும், அமைதியின் அரசராகவும் எம் மத்தியிலே தோன்றியுள்ளார்.

இறைவாக்கினர் எசாயா 'ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார். ஆட்சிப் பொறுப்பு அவர் தோள் மேல் இருக்கும். அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள்ள தந்தை, அமைதியின் அரசர் என அழைக்கப்படும்' என்று தெரிவிக்கிறார் (எசாயா 9:6).

சமாதானத்துக்கான தேடல்கள் என்றுமில்லாதவாறு அதிகரித்து இயல்பு வாழ்க்கை ஓரளவு அமைதியாகத் தொடங்கிவிட்டாலும் எம் மண்ணில் தோன்றிய சமாதான ஒளி இன்னும் நிரந்தரமாகவில்லை. ஒவ்வொரு நாள் செய்திகளும் அவற்றின் பின்னணிகளும் அவை தருகின்ற விளக்கங்களும் எமது உள்ளத்தில் தோன்றியுள்ள சமாதான சூழ்நிலையின் பின்னிலையில் ஏதோ ஒருவித பயத்தைத் தோற்றுவித்துக்கொண்டே இருக்கிறது.

(2 ஆம் பக்கம் பார்க்க)

# நிரந்தரமான சமாதானத்திற்காக...

அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்க உணர்வு இன்னும் எம் உள்ளங்களைவிட்டு முழுமையாக நீங்கவில்லை.

மருதமடு அன்னையின் தென்னிலங்கை பவனியின் பின்னர்தான் சிங்களப் பேரினவாதிகளினதும் இனவாதத்தைத் தூண்டும் தீவிரவாதிகளினதும் மனங்கள் இறைவன் அருளால் ஓரளவு கனிந்துபோயின. மருதமடு அன்னையின் பவனியின் பின்னர்தான் அரசியல் தலைவர்களினதும், மதத் தலைவர்களினதும் பெரும்பாலான சிங்கள மக்களினதும் மனதுகளில் எமது நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற எண்ணம் துளிர்விடத் தொடங்கியது. மருதமடு அன்னையின் அருளால்தான் மிக நீண்ட காலமாக நாம் நம்பி நம்பி ஏமாந்து போன யுத்த நிறுத்தம் கைகூடியது. மருதமடு அன்னையின் அருளால் தான் நிரந்தர சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகளும், அரசும் இணக்கம் தெரிவித்தன என்பது எவராலும் மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

போரின் பின்னர் நிரந்தர சமாதானத்திற்கு முன்னர் ஏற்பட்டுள்ள இந்த இடைக்கால அமைதிக் காலத்தை உரிய விதமாக நிரந்தர சமாதானத்தை நோக்கி நகர்த்திச் செல்வது சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரதும் விசேட கடமையாகும். அண்மையில் நெடுந்தீவில் தோன்றியுள்ள அரசியல் பதட்டமான நிலை அனைவரையும் குழப்பமடையச் செய்துள்ளது. அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் உரிமை உண்டு அதனைத் தடுப்பதற்கு யாருக் கும் உரிமை இல்லை என்பதை ஏற்றுக்கொள்ளுகின்ற வேளையில் அவ்வரசியல் நடவடிக்கைகள் மக்களையும் அவர்கள் மன உணர்வுகளையும் எந்த வகையிலும் குழப்பமுறச் செய்யவோ அவர்களின் வாழ்க்கை முறையை பாதிக்கவோ கூடாது என்பது கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டிய ஒரு விடயமாகும்.

மனித உரிமைகள், மனித மாண்பு, அன்றாட இயல்பு வாழ்வு, அடிப்படைச் சுதந்திரம், மக்களின் பொதுத்தேவைகள், என்பன எல்லாம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய காலம் இதுவாகும். இவ்வுரிமைகளை நிலைநாட்ட அனைவரும் உழைக்க வேண்டும். இவ் அடிப்படை உரிமைகளிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் செயல்படுவோரை இனங்காணுவதும், தடுத்து நிறுத்துவதும் அதிகாரத்தில் உள்ளவர்களது தலையாய கடமையாகும். இவை நேரத்தோடு தடுத்து நிறுத்தப்படாதவிடத்து நாம் இன்னும் ஒரு உரிமைகள் மறுக்கப்பட்ட நிலைக்கே தள்ளப்படுவோம்.

நிலைமைகள் இன்னும் முற்று முழுதாக சமாதானத்தின் பால் திரும்பிவிடவில்லை. எதிர்க்கட்சிகள் எதிர்க்கும் கட்சிகள் என்ற தவறான நிலைப்பாட்டுடனே பல அரசியல் கட்சிகள் சமாதானத்தை எதிர்த்துக்கொண்டே இருக்கின்றன. சில சமாதான எதிர்ப்பு சக்திகளும், தீவிர மதத் தலைவர்களும் சமாதானத்தை குழப்புவதிலே கண்ணாய் இருக்கின்றனர். ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் தற்போதைய சமாதானம் பற்றிய அரசியல் நிலைப்பாடு கவலை தருவதாகவே உள்ளது. இவை யாவற்றையும் தாண்டி நீதியோடு கூடிய ஒரு நிரந்தர சமாதானத்தை இலங்கை மண்ணில் ஏற்படுத்த இறைவன்தான் தம் அருளினைப் பாலிக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தமது மாவீரர் தின உரையில் - இத்தீவில் வதியும் சகல சமூகத்தினரும் ஒற்றுமையாக - ஒத்திசைவாக - ஒன்றுகூடிவாழ வேண்டும் என்பதுமே எமது ஆழமான அவா. பெரும் நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும், உலகத்தின் நல்லாசியுடனும் நிகழ்ந்துவரும் சமாதான பேச்சுக்களை தமது சுயநல அரசியல் நோக்கங்களுக்காக சிங்களப் பேரினவாத சக்திகள் குழப்பிவிட்டால் தமிழ் மக்கள் அதை ஒரு வரலாற்று துரோகமாகவே கருதுவார்கள் என அவர் தெரிவித்த கருத்துக்கள் சமாதானத்தின் பால் முழு நம்பிக்கையையும் மனநிறைவையும் தருகின்றன.

இன்றைய சமாதான சூழலை ஏற்படுத்த வழிவகுத்த இறைவனுக்கு நாம் எப்போதும் நன்றியுடையவர்களாய் இருக்கவேண்டும். இன்றைய சமாதான சூழ்நிலையை உருவாக்க உழைத்த அனைவரும் நன்றிக்குரியவர்களே. குறிப்பாக இலங்கைப் பிரதமர் மேதகு ரணில் விக்கிரமசிங்கா, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு வே. பிரபாகரன் ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்கள். போரில் ஈடுபட்ட இரு தரப்பினருக்குமிடையில் உறவினை ஏற்படுத்தும் பாலமாக தளராத உறுதியுடன் உழைத்த நோர்வே தரப்பினரை மறப்பதற்கில்லை.

சமாதானம் வந்துவிட்டது என்ற நினைப்பில் கடந்தகால கடின அனுபவங்களையும், மண்ணின் வேதனைகளையும் மக்களின் அவலங்களையும் மறந்து வெறும் கொண்டாட்டங்களிலும் வெளி ஆடம்பரங்களிலும் மட்டும் கிறிஸ்து பிறப்பு விழாவினைக் கொண்டாடுவது ஏற்புடையது அல்ல. இவ் விழா ஒரு பகிர்வின் விழா. இறைவன் தன் வாழ்வை மனிதர்களோடு பகிர்ந்துகொண்ட விழா. எமது இவ்விழாக்கால கொண்டாட்டங்களை விருந்துகளை இனிமையான பொழுதுகளை இல்லாதவர்களோடும் பகிர்ந்து கொள்ளுவோம். மிக நீண்ட கால இடைவெளியின் பின்னர் சுதந்திரமாக இவ்விழாவினைக் கொண்டாடவும் பட்டாசினை வெடிக்க வைக்கவும் கூடிய ஒரு நிலை தோன்றியுள்ளது. பட்டாஸ் கொழுத்துகின்ற அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளாத எம் இளையவர்கள் பட்டாசினைக் கொழுத்தும்போது நடந்துகொள்ளுகின்ற விதம் பற்றி கவனத்தில் எடுத்துக்கொள்வது நல்லது. பட்டாஸ் கொழுத்தும் மகிழ்வில் மற்றவர்களைப் பயமுறுத்துவதும், துன்புறுத்துவதும், குழப்பித் தொந்தரவு செய்வதும் தவிர்க்கப்பட வேண்டும்.

திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் தமது பணியின் 25ஆவது ஆண்டின் ஆரம்பத்தில் திருச்செபமாலை ஆண்டினை பிரகடனம் செய்து உலக சமாதானத்துக்காகவும் குடும்பங்களின் ஒற்றுமைக்காகவும் செபமாலையைச் செபிக்கும்படி வேண்டியுள்ளார். எமது மண்ணில் தோன்றியுள்ள சமாதான ஒளிக்கீற்று என்றும் நின்று நிலைக்கவும், நீதியோடு கூடிய நிரந்தர சமாதானம் ஏற்படவும் திருச்செபமாலை ஓதுவோம்.

பாலகர் இயேசு பேச்சுவார்த்தை நடத்தும் தரப்பினரிடையே பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வியத்தகு ஆலோசகராகவும் பேச்சுவார்த்தையின்போது கடினமான விடயங்களையும், விட்டுக்கொடுக்காத விடயங்களையும் இலகுவாக்குவதில் வலிமை மிகுந்த இறைவனாகவும் இலங்கையில் வாழும் எல்லா மக்களையும் அன்போடு அரவணைத்து பாதுகாத்து வழிநடத்தும் என்றுமுள்ள தந்தையாகவும் எம் மண்ணில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதில் அமைதியின் அரசராகவும் எப்போதும் இருக்க இறை ஆசீர் வேண்டுவோம்.


## பருத்தித்துறை நகராட்சி மன்றம் வரவு செலவுத் திட்டம் - 2003

255ஆம் அதிகாரமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 178 (3) ஆம் பிரிவிற்கமைவாக பருத்தித்துறை நகராட்சி மன்றத்தின் 2002ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் பொதுமக்கள் பார்வைக்காக நகர சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

ந.சிவபால தருமகுலசிங்கம்
செயலாளர்
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

அ.வின்சன் கெனடி (ஜே.பி.யு.எம்)
தலைவர்
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்
பருத்தித்துறை, 2002.12.23
(சி-350)





## சித்திவிநாயகர்
முறிவு நோவு வைத்தியம்

- ❋ பழைய நோவு
- ❋ புதிய நோவு
- ❋ சுழுக்கு
- ❋ வாதம்
- ❋ மூட்டுவலி
- ❋ முறிவு

முதலான எந்த நோய்க்கும் சிறந்த வைத்தியம்

✳ தேவைக்கு ஏற்ப நோவு எண்ணெய் பெற்றுக்கொள்ளலாம்.

✳ உடனுக்குடன் புக்கை கட்டப்படும்.

குமாரலிங்கம் வீதி,
இணுவில் கிழக்கு.

K.வேல்முருகன்
(வைத்தியர்)



## MEDICAL CHECK UP
## வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்!
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்!

✹40 வயதுக்கு மேற்பட்ட நோய் உள்ள. நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐ செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
✹X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள். சிறுநீர்ப் பரிசோதனை. இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விவரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்) ஆஸ்பத்திரி (முன்) வீதி, யாழ்ப்பாணம்.
(சி-237)



நிறைஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், தபு நடித்த
தாயின் மணிக்கொடி
நாளை முதல
தென்காசிப்பட்டணம்
11.00, 2.45, 6.00 (பு.நே)
(சி/287)



ராஜா யாழ்ப்பாணம்.
எம்.ஜி.ஆர். அவர்களின் 15ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு எம்.ஜி.ஆர்., ராதா சலூஜா நடித்த
இதயக்கனி
10.30, 2.30, 6.30
(சி:262)


## இன்றைய நாள் இனிய நாள்

**24-12-2002 - செவ்வாய்க்கிழமை**

**சித்திரபானு ஶ்ரீ, மார்கழி மீ - 9 ஆம் திகதி**

*திதி* - அபர பட்ச பஞ்சமி - இரவு - 10.08 வரை அதன் பின் ஷஷ்டி

*நட்சத்திரம்* - ஆயிலியம் - காலை 7.12 - வரை அதன் மேல் பூசம்.

**மேடம்** :- மாதா சுகக்குறைவு, வைத்தியச் செலவு, கொடுத்தபணம் வரவு தாமதம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**இடபம்** :- மனமகிழ்ச்சி, பண வரவு, காரிய சித்தி, ஆடையாபரண பலன், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**மிதுனம்** :- சேமிக்கும் சிந்தனை இராது, வீட்டில் பட்டி மன்றம், பெண களால் பிரச்சினை, கல்வி முன்னேற்றம், வியாபார முனனேற்றம்.

**கர்க்கடகம்** :- விருந்தினர் வருகை, அறுசுவையுண்டி, ஆடையலங்கார மகிழ்வு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**சிங்கம்** :- வீண் அலைச்சல், செலவு தானாக தேடிவரும், விதண்டாவாதம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- மனமகிழ்வு, பக்திநிலை, முயற்சி திருவினையாக்கும், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
**இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- புதிய தொழில் முயற்சி, முயற்சி திருவினையாக்கும் பொதுத் தொண்டில் ஈடுபாடு, மரியாதை, கல்வியில் ஊககம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

**விருச்சிகம்** :- மனஸ்தாபம், வைத்தியச் செலவு, தன்னையறியாத பயம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**தனு** :- எந்த அங்குரார்ப்பணமும் செய்வது நன்றல்ல, கவலை, பணவரவு குறைவு, கல்வி முன்னேற்றம், வியாபார சமநிலை.

**மகரம்** :- பெண்கள் மகிழ்ச்சி, அறுசுவையுண்டி, ஆடையணிவதில் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- தேகசுகம் நன்று, பழைய கடன் வரவு, எதிரி தலை குனிவு, எடுத்தகாரியம் வெற்றி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை

**மீனம்** :- தேகசுகக் குறைவு, புத்திரரால் கவலை, வைத்தியச் செலவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு நடாத்தும் சமய அறிவுப் போட்டிக்கான பரீட்சையை பிற்போடலும் விண்ணப்ப முடிவுத் திகதியை நீடித்தலும் - 2002

வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அனுசரணையுடன் 29.12.2002ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பின்வரும் பரீட்சை நிலையங்களில் நடைபெறவிருந்த மேற்படி பரீட்சை - மாணவர்களினதும் பெற்றோர்களினதும் ஏகோபித்த கோரிக்கைக்கமைவாக எதிர்வரும் 19.01.2003 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது. அதற்கமைவாக விண்ணப்ப முடிவு திகதியும் 13.01.2003 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

01. யா/வட.இந்து மகளிர் கல்லூரி.
02. யா/உடுப்பிட்டி பெண்கள் உயர்தரப் பாடசாலை.
03. யா/விக்கினேஸ்வரா கல்லூரி, நெல்லியடி.
04. யா/இராமநாதன் கல்லூரி.
05. யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.
06. யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
07. யா/இந்து மகளிர் கல்லூரி.
08. யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்.

குறிப்பு:-
2002ஆம் ஆண்டில் தாம் கல்வி கற்ற தரத்தின் அடிப்படையிலேயே அனைத்து மாணவரும் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

சைவசமய விவகாரக்குழு,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.
சி/353



## அன்பளிப்பு; அன்பளிப்பு; அன்பளிப்பு!

எமது வாடிக்கையாளர்களின் நன்மைகருதி எமது ஸ்தாபனத்தில் மாணவர்களுக்கான நூல்கள், புத்தகங்கள், (அப்பியாசப் புத்தகங்கள் தவிர்த்து), உபகரணங்கள், காட் வகைகள் மற்றும் கல்வி சம்பந்தமான விளையாட்டுப் பொருட்கள் ஆகியவற்றை 2,000/- இற்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு விசேட அன்பளிப்பாக, ஒவ்வொரு 2,000/- இற்கும் சைனாவில் (China) இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு பாடசாலை புத்தகப்பை அன்பளிப்பாக வழங்கப்படும். கல்லூரி மாணவர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு நாட்களிலும் விற்பனை நடைபெறும்.

இச்சலுகை கையிருப்பில் உள்ளவரை மட்டுமே.

ஆல் சிலோன் டிஸ்ரிப்பியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(சி-279)

## சின்னஞ்சிறு செய்திகள்

### நாயன்மார்கட்டில் மீண்டும் முன்பள்ளி

நாயன்மார்கட்டு சனசமூக நிலைய முன்பள்ளி, ஏழு வருடங்களுக்கு பின்னர் மீண்டும் ஜனவரி மாதம் முதல் செயற்படவுள்ளது. சனசமூக நிலையத்திற்கான அடுத்த வருட புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டத்தின் பின்னர், இதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், முன்பள்ளியில் சிறார்களை சேர்க்க விரும்பும் பெற்றோர் நிலையச் செயலாளர் அ.ஜீவழகனிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

### புன்னாலைக்கட்டுவனில் விக்கிரகங்கள் திருட்டு

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஞான வைரவர் ஆலயத்தில் இருந்த, ஐம்பொன்னாலான ஆறு லட்சம் ரூபா பெறுமதியான விக்கிரகங்கள் கடந்த 16 ஆம் திகதி இரவு களவாடப்பட்டுள்ளன.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக ஆலய அறங்காவலர், சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (83)

### நத்தார் தின விழா

(நவிண்டில்)

உடுப்பிட்டித் திருச்சபையின் நத்தார்தின நிகழ்வுகள் இன்று பி.ப 4 மணிக்கு அருட்திரு பி.தேவதாஸ் அடிகளார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

31 ஆம் திகதி இரவு 11 மணியிலிருந்து விழிப்பு இரவு ஆராதனை, புதுவருட ஆராதனையாக இடம் பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (116)

### மறியற்போராட்டத்துக்கு ஆதரவு

திக்கம் வடிசாலையை மீண்டும் கூட்டுறவாளர்களிடம் ஒப்படைக்கக் கோரி நடாத்தப்படும் மறியற்போராட்டத்திற்கு யாழ். மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் ஆதரவு தெரிவித்துள்ளது.

இப்போராட்டத்தில் வன்னி மாவட்டத்தின் சகல கூட்டுறவு சங்கங்களையும் கலந்து கொள்ளுமாறும் சமாசம் கேட்டுக்கொண்டுள்ளது.

### பட்டாசு வெடித்து தபாற்பெட்டி சேதம்

(சரசாலை)

சாவகச்சேரி தபால் நிலையத்தின் முன்னாலுள்ள அஞ்சல் பெட்டிக்குள் சிறுவனொருவன் பட்டாசு கொழுத்தி எறிந்ததில் அது வெடித்து, தபால் பெட்டி சேதமடைந்தது. இதனையடுத்து பெட்டியின் சேதத்திற்கு நஷ்டஈடு தருவதாகச் சிறுவனின் பெற்றோர் ஒப்புக்கொண்டுள்ளனர். (34)

### இரவில் உலாவரும் நத்தார் தாத்தா

(உரும்பிராய்)

உரும்பிராய், ஊரெழு ஆகிய பகுதிகளில் சுமார் ஏழு வருடங்களின் பின் இரவு வேளைகளில் நத்தார் தாத்தா உலா வருகிறார்.

கடந்த ஏழு வருடங்களாக இரவு வேளைகளில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டத்தால் நத்தார் தாத்தா மாலை வேளைகளிலேயே உலா வந்தது குறிப்பிடத்தக்கது. (84)

### வரணி - குடத்தனை வீதியில் வெள்ளம்

வரணிக்கும் குடத்தனைக்கும் இடையிலான ஒரு கிலோமீற்றர் வீதி திருத்தப்படாமல் உள்ளமையால் பயணிகள் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது பெய்துள்ள அடைமழையினால் இவ்வீதியில் வெள்ளம் மூடிக்காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (62)

### உலக வங்கி உதவியுடன்

# 1900 கோடி ரூபா செலவில் அரச சேவை மறுசீரமைப்பு!

### சகல அரச ஊழியருக்கும் நவீன தொழில்நுட்பப் பயிற்சி

(கொழும்பு)

உலக வங்கியின் உதவியுடன் அரசாங்க சேவை நிர்வாகச் செயற்பாடுகள் மறுசீரமைப்புச் செய்யப்படவுள்ளதாக பொதுநிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன தொிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன மேலும் தொிவிக்கையில்,

உலக வங்கியின் உதவியுடன் அரச நிர்வாகச் செயற்பாடுகள் நவீனமயப்படுத்தப்பட்டு மறுசீரமைக்கப்படவுள்ளன. இதற்கென உலக வங்கி சுமார் 1900 கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தாா.

அத்துடன் இந்த மறுசீரமைப்பில் முக்கியமாக, அரச நிர்வாகங்கள் தொடர்பாக இருந்து வரும் சமகாலத்துக்குப் பொருந்தாத சட்டங்கள் நீக்கப்படவுள்ளன. இதற்குப் பதிலாகப் புதிய சட்டதிட்டங்கள் வகுக்கப்படும்.

திறமையுள்ள சேவையாக அரசாங்க சேவை நிர்வாகத்தை மாற்றுவதற்காக நவீன தொழில்நுட்ப வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன. இதற்காக நவீன தொழில் நுட்பப் பயிற்சிகள், அனைதது அரசாங்க ஊழியர்களுக்கு வழங்குவதற்கும் பொது நிர்வாக அமைச்சுத் தீர்மானிததிருப்பதாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க முதலீடுகளுக்கு இலங்கையில் சாதகமான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன

### இலங்கை வந்த அமெரிக்கப் பிரதி அமைச்சர்


(கொழும்பு)

இலங்கையில், வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் வர்த்தக நடவடிக் கைகளுக்கு சாதகமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக, இலங்கை வந்திருந்த அமெரிக்கப் பிரதி வர்த்தக அமைச்சர் வில்லியம் எச்.லாஷ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அமெரிக்கப் பிரதி அமைச்சர் மேலும் தெரிவிக்கையல்,

இலங்கையில் தற்போது வெளிநாட்டு முதலீடுகளை மேற்கொள்ள உகந்த சூழல் ஏற்பட்டுள்ளமை குறித்து அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு விளக்கப்படும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த ஜூலையில் அமெரிக்கா வந்திருந்த போது, அமெரிக்க ஜனாதிபதி புஷஷிடம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் , இலங்கையின் அரசியல், பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் வாய்ப்புக்களை ஆராயவே இங்கு வந்துள்ளேன்.

பொருளாதார அபிவிருத்திக்காக இலங்கைத் தொழில் நிறுவனங்களுடன் அமெரிக்க நிறுவனங்கள் கூட்டு முதலீடுகளைச் செய்து தொழில்நுட்ப ரீதியாக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவது தொடர்பாகப், பேச்சுக்களைத் தாம் நடத்தியுள்ளதாகவும் அமெரிக்கப் பிரதி வர்த்தக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் கிளிநொச்சியிலுள்ள கனகாம்பிகைக்குளம் நிரம்பி வான்பாய்வதைப் படத்தில் காணலாம்

### அபராதம் செலுத்தாதோருக்கு

# சிறைத்தண்டனைக்குப் பதில் வேறு வழிகளில் தண்டனை!

### சிறைகள் நிரம்பி வழிகின்றனவாம்

(கொழும்பு)

குற்றப்பணம் செலுத்தத் தவறியதற்காகச் சிறையில் அடைக்கும் நடைமுறைக்குப் பதிலாக வேறு வழிகளைக் கடைப்பிடிப்பது பொருத்தமானதாக இருக்கும் என, சிறைச்சாலைகளின் நிலை தொடர்பாக ஆராய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தற்போது நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் ஒன்பதாயிரம் பேர் பல்வேறு குற்றங்களுக்காகவும் சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். இதனால் சிறைச்சாலைகளில் இடநெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுககு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க முடியாத நிலையும் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு ஏற்பட்டிருக்கின்றது.

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரில் 76 சதவீதமானோர் குற்றங்களுக்கான அபராதம் செலுத்தாததால், சிறைவாசத்தை அனுபவிப்பவர்களாகவும், இவர்களில் பெரும்பாலானோர் 40 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் உள்ளனர்.

சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடிகளைத் தவிர்க்க, அபராதம் செலுத்தாமைக்காக சிறைத் தண்டனை விதிப்பதற்குப் பதிலாக வேறுவழிகளைப் பின்பற்றுவது தொடர்பாக ஆராயப்படவேண்டும் என ஆலோசனைக்குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# தனியார் தொழிற்றுறை வளர்ச்சிக்கு ஐரோப்பிய வங்கி 400 கோடி நிதியுதவி

தனியார்துறைத் திட்டங்களில் முதலீடு செய்வதற்காக 400 கோடி ரூபாவை ஐரோப்பிய முதலீட்டு வங்கி உதவியாக வழங்க முன் வந்துள்ளது.

இதற்கான உடன்படிக்கை நேற்று நிதியமைச்சின் செயலகத்தில் கைச்சாத்திடப்பட்டது. தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள தொழிலதிபர்களுக்கு இந்நிதி, உதவியாக வழங்கப்படும். இலங்கையின் தொழில்துறை அபிவிருத்தியை முன்னிடடே இந்நிதியுதவி வழங்கப்படுகின்றது. இத்தகைய உதவிகளை வழங்கும் முதலாவது வெளிநாட்டு வங்கி, ஐரோப்பிய முதலீட்டு வங்கியே என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

### சமநிலையில் முடிவுற்ற உதைபந்தாட்டப்போட்டி

(நவிண்டில்)

அல்வாய் நண்பர்கள் அணிக்கும் பருத்தித்துறை ஐ.வி.கழக அணிக்கும் இடையில் அல்வாய் மனோகரா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற லீக் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி, 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவுற்றது.

ஆட்டம் ஆரம்பமாகி 37 ஆவது நிமிடத்தில் ஐ.வி.கழகம் ஒரு கோலைப் பெற்றது. 37 ஆவது நிமிடத்தில் அல்வாய் நண்பர்கள் கழகம் தமது முதலாவது கோலைப் பெற்றனர். பின்னர் இடம்பெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் இறுதி வரை இரு அணிகளும் கோல் எதனையும் பெறாததை அடுத்து ஆட்டம் 1-1 என்ற நிலையில் முடிவுற்றது. இப்போட்டிக்கு நவநேசன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (116)

# இலங்கையை விசேட நாடாகக் கருதி உதவிகள் பெற்றுக் கொடுக்கப்படும்

### நோர்வே அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையை விசேட நாடாகக் கருதி வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொடுக்க நோர்வே அரசாங்கம் தயாராக இருப்பதாக, நோர்வேக்கான பயணத்தை முடித்துவிட்டுத் திரும்பிய காணி அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ராஜித சேனாரத்ன உரையாற்றுகையில்,

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் கடந்த இருபது வருடகால யுத்தத்தினால் நாசமாக்கப்பட்டிருக்கின்றன. சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுகின்ற இந்நிலையில், காணி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நோர்வே உதவத்தயாராக இருப்பதாக அந்நாட்டு அதிகாரிகள் தமக்கு உறுதியளித்ததாக மேலும் தெரிவித்தார்.

# ஆயுதக் களைவின் பின்னரே பாதுகாப்பு வலய நீக்கம்!

### அரசாங்கத்துக்கு ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்கள் அனைத்தும் களையப்பட்ட பின்னரே வடக்கு-கிழக்கு பகுதிகளில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்க வேண்டும் என அரசாங்கத்திடம் ஜே.வி.பி கோரிக்கை விடுத்திருக்கின்றது.

புலிகள் ஆயுதங்களை வைத்துக்கொண்டு, உயர் பாதுகாப்பு வலயங்களை விட்டு இராணுவத்தினரை வெளியேறுமாறு கோருகின்றனர்.

மீள்குடியேற்றம் என்ற பெயரில் உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து இராணுவத்தினர் விலக்கப்பட்டுவிட்டால் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளையும் புலிகள் கைப்பற்றிக்கொள்வர் எனத் தெரிவித்துள்ள ஜே. வி.பி. -

இந்த விடயத்தில் அவதானமாக நடக்கத்தவறின் நாடு அபாயகரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் தெரிவித்துள்ளது.

# நிலைமாறு உலகப் பொருளாதாரத்தில் பிரிந்து செல்ல முயன்ற கியூபெக்



## சுயநிர்ணயம் – ஒரு பார்வை

### பகுதி - 13

வேலும்மயிலும் சேந்தன்

இக்கட்டுரைத் தொடரின் இன்றைய பகுதியாக, கியூபெக்கினது பிரிவினைப் பற்றிப் பார்க்கவுள்ளதாகச் சென்றவாரம் கூறியிருந்தோம். கியூபெக்கின் பிரிவினைக் கோரிக்கையானது இன்று பரவலாகப் பேணப்படும் சமஷ்டி முறைகளுக்கும், எதிர்காலத்தில் சமஷ்டி முறைமையை நாடுவோருக்கும், முக்கியமான ஆராய்வு விடயம் மட்டுமன்றி, சமஷ்டியானது - பிரிவினைக்கு வழி சமைக்கும் எனக் கோஷமிடும் பிரிவினருக்குக் கூட ஆர்வமிகு விவகாரமாக இருக்கிறது.

சமஷ்டி முறையானது வேற்றுமைகளை ஏற்றுக்கொள்ளும் தன்மையினை எப்போதும் முதன்மைப் படுத்துவதாகவே இருந்துவருகின்றது. வேற்றுமைகள் என்றவிடத்து கனடாவைப் பொறுத்தவரை, அதிலும் கியூபெக்கினைப் பொறுத்தவரை - இனத்துவ முரண்பாடு பிரதானமானதாகும்.

இந்த வகையில் - நைஜீரியா, பாகிஸதான், இந்தியா, மலேசியா, கனடா, பெல்ஜியம், ஸ்பெயின் மற்றும் தற்பொழுது உருவாக இருக்கும் சமஷ்டியான ஐரோப்பிய ஒன்றியம என்பன இனதத்துவ வேறுபாடுகளைக் கொண்டமைந்ததற்கு உதாரணங்களாகும்.

இந்நாடுகளில்கூட - கியூபெக்கினரின் பிரிவினைக் கோரிக்கை இன்றும் சர்ச்சைக்குரிய விடயமாகவே இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆனால், இனத்துவ வேறுபாடுகள் இருக்கும் நாடுகளில் மட்டும்தான் சமஷ்டி முறைமை உள்ளது என்ற கூற்றும் பொருத்தமற்றதாகும். இந்த வகையில் - ஐக்கிய அமெரிக்கா, அவுஸதிரேலியா, ஜேர்மனி ஆகியன ஒரே இனத்தினரைக் கொண்ட நாடுகளும் சமஷ்டி முறையையே பின்பற்றுகின்றன.

இன்றைய உலகமயமாதல் போக்கில் அல்லது இருதுருவ சர்வதேச அரங்கில் - சர்வதேச அரங்கு உருவானதற்குப் பின்னர், சர்வதேச உறவுகளிலுள்ள முரண்பாடுகளைத் தீர்க்கும் 'சர்வரோக நிவாரணியாக' சமஷ்டி அமைப்பு முறைமை கொண்டு வரவும்படுகின்றது. அதாவது, சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப் பின்பு தேசியவாதப் போராட்டங்களைக் கைவிடச் செய்வதான தந்திரோபாயத்தில் - சமஷ்டி முறைமை முன்வைக்கப்படுகின்றது. அதேவேளை, அது பிரிவினைக்கு எதிகாலத்தில் இட்டுச்செல்லாதா? என்ற அச்சமும் கியூபெக்கின் கோரிக்கையும் ஒரே இணைந்த சமாந்தரக் கோடுகளாகக் காணப்படுகின்றன.

இந்தவகையில் பார்க்கும்போது, கியூபெக் உண்மையில் தனது சொந்த சுயநிர்ணயத்தினை தக்க வைத்துக்கொள்ளவே பிரிவினைக் கோரிக்கையை 1982, 1995 ஆகிய இரண்டு தடவைகளிலும் முன்வைத்தது. என்பது மிகையல்ல. அதாவது, கனடாவில் - கியூபெக்கியருக்கு எவ்விதமான புற அழுத்தங்களும் பிரிவினை கோரும்படியாக வெளியிலிருந்து தரப்படவில்லை.

### சமஷ்டி முறைமையில் சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வு (Asymmetry Within Federal Systems)

அண்மைக் காலமாக "சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வு" முறைமையானது மிகவும் தீவிரமாகப் பேசப்படும் விடயமாகும். குறிப்பாக, 1995 ஒக்ரோபர் 30 ஆம் திகதி கியூபெக்கியர் பிரிவினை கோரியதன் பின்னர், அந்த அனுபவத்தின் அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றிய அரசியல் திட்ட வரைஞர்களால் முன்வைக்கப்பட்டதே இந்த சமச்சீரற்ற அதிகாரப்பகிர்வாகும்.

அதாவது, பிரிவினையை வேண்டி நிற்கும் சமஷ்டி மாநிலத்தினை - பிரிந்து போகாது தடுத்து, சமஷ்டி அரசுகளுக்கிடையே ஒருமைப்பாட்டு உணர்வினை வலுப்படுத்துவதற்காக சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இச்சமச்சீரற்ற அதிகாரப்பகிர்வானது, அரசியல் திட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டதாக அமைய வேண்டும். இந்த வகையில் - "Character of Quebec"- சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வை தற்பொழுது கியூபெக்கியர்களுக்கு வழங்குகின்றது.

ஆனால் - கியூபெக்கியர்கள் ஏன் பிரிந்து செல்லத் தடைப்பட்டனர் என்ற வினா நம்முன் நிற்கின்றது. குறிப்பாக 1995 இல், அப்போது நிலவிய உலகப் பொருளாதாரத்தின் நிலைமாறும் தன்மையே (Transisti-onal of World Economy) இப்பிரிவினைக் கோரிக்கைக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

90 களின் ஆரம்பத்தில் நடைபெற்ற வளைகுடா யுத்தத்தின் விளைவாக - வடஅமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (NAFTA) அதன் ஆரம்பக் கட்டத்திலேயே செயலிழக்கத் தொடங்கியது. பெற்றோல் வளத்தின் விலையுயர்வும், தட்டுப்பாடும் - கனடாவில் வேலையற்றோரையும் சமூக நிம்மதிக் குறைவையும் ஏற்படுத்தின.

இவ்விடத்தில் நாம் விசேடமாக ஒன்றை கவனிக்க வேண்டும். கியூபெக் மாநிலத்தில் பெரும்பாலான பொருளாதார உட் கட்டமைப்புகளும் தொழில் முயற்சிகளும் அரசின் உடமையாகவே இருக்கின்றன. எனவே, வளைகுடா யுத்தத்தினை அண்டிய காலப்பகுதியில் கியூபெக் மாநில அரசாங்கம், தனது மாநிலத்தினை ஏனைய கனேடிய மாநிலங்களைப்போல் அல்லாது பொறுப்புக்கூறும் தன்மையில் (Accountablity) இருந்து தன்னை விலக்கிக்கொள்ள முடியாது தடுமாறத் தொடங்கியது.

அதேவேளை, ஏனைய மாநிலங்களின் தனியார்துறை மேலாதிக்கம் செய்ததனால், மற்றைய மாநில அரசாங்கங்களுக்கு பொறுப்புக் கூறும் தன்மை ஒப்பீட்டுரீதியில் குறைவாக இருந்தது. இவற்றின் பொருளாதார நிலைப்பாடு, அரசியல் நிலைப்பாட்டில் மாற்றத்தினை வேண்டிநிற்க, கியூபெக் மீண்டும் தனிமையை உணர்ந்தது. இதன் விளைவாகவே - தனியாகப் பிரிந்து போவது என்ற முடிவு கியூபெக்கியன் கட்சியினால் முன்மொழியப்பட்டது. இதிலிருந்த தன்னை விடுத்துக்கொள்ள முயன்ற கனடா சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வை Character of Quebec இல் முன்வைத்தது.

அது மட்டுமன்றி - மாநில அரசாங்கங்கள் தமக்கிடையே வர்த்தகப் பொருளாதார உடன்படிக்கைகளை மேலும் ஸ்திரப்படுத்திக் கொண்டன. இவ்வாறு, கனடா திடீரென 90 களின் ஆரம்பத்தில் சர்வதேச வர்த்தகத்திலிருந்து தன்னை வேறுபடுத்திச் செயற்பட்டதனால், NAFTA விரைவான தோல்வியைச் சந்தித்தது. எனவே NAFTA தோல்வியைச் சந்திக்க கியூபெக் மாநிலம் ஒரு காரணமெனலாம்.

இவ்விடயத்தில், சர்வதேச ரீதியாக நடைபெற்ற ஒரு நிகழ்வுமூலம் கனடா மேலும் ஒரு அதிர்ஷ்டத்தினைப் பெற்றுக்கொண்டது எனலாம். அதுதான், ஹொங்ஹொங்கிலிருந்து பிரித்தானியா விலகி, மீண்டும் ஹொங்ஹொங்கினை சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டதாகும். இந்த நிலைமையில் ஹொங்ஹொங்கிலிருந்த பாரிய முதலீடுகளை அவற்றின் முதலீட்டாளர்கள் கனடாவை நோக்கி நகர்த்தினர். இதேநேரத்தில், வளைகுடா யுத்தமும் முடிவுக்கு வந்தது. இந்த இரண்டும் ஏறக்குறைய சமகாலத்தில் நடைபெற, அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி அதிகரிப்பு வீதத்தினைவிட, கனடாவின் பொருளாதார வளர்ச்சி அதிகரிப்புவீதம் கூடுதலாக இருந்தது. கனடா திடீரென பொருளாதார செழிப்புக்குள்ளானது.

கனடாவில் இருந்து கியூபெக் பிரியவேண்டிய புறச்சூழ்நிலை மெல்ல அகலத் தொடங்கியது. அந்த வேளையில், ஐரோப்பாவில் - பிரித்தானியாவில் இருந்து வேல்ஸ் மாநிலத்திற்கு அளிக்கப்பட உத்தேசிக்கப்பட்டிருந்த சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வு முறைமையை, கனடா தனது மாநிலமான கியூபெக்கிற்கு உடனடியாக வழங்கியது.

இந்நிலையில் ஏனைய மாநிலங்களைவிட கியூபெக் கனடாவில் கூடுதலான அதிகாரங்களை அனுபவிக்கும் மாநிலமாக மாறியது. அதுமட்டுமல்லாமல் - சமச்சீரற்ற அதிகாரப்பகிர்வு முறைமை உலக அரசறிவியல் வரலாற்றில் முக்கிய இடத்தினைப் பெற்றுக்கொண்டது.

இந்த வகையில், இலங்கையில் 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட காமினி திஸநாயக்க, தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் - Vision For The 21st Century என்ற கோஷத்துடன், இச் சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வு முறைமையை இலங்கை இனப் பிரச்சினைக்கும் தீர்வாக தாம் முன்வைத்துச் செயற்படப் போவதாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது


இது ஒருபுறமிருக்க -

கியூபெக் மக்கள், பிரிவினைக்கு எதிராக மக்கள் தீர்ப்பின் மூலம் விடை கொடுத்ததன் பின்பும், கியூபெக் அரசாங்கம் தனக்கிருக்கும் பிரிந்து செல்லும் உரிமையினை வைத்துக்கொண்டு - கனடிய உயர் நீதிமன்றத்தில் தாம் பிரிந்து செல்லப் போவதாக வழக்குத் தொடுத்தது.

இதன்படி கீழ்வரும் விடயங்கள் கியூபெக் அரசாங்கத்தினால் நீதிமன்றின் முன் எழுப்பப்பட்டன.

✷ மேற்படி வழக்கானது, கனடிய அரசியல் திட்டத்தின் பிரகாரம் - கியூபெக் பிரிந்துசெல்ல உரித்துடையதா? அவ்வாறு பிரிந்து செல்லும் போதும் தன்னிச்சையான முடிவுடன் பிரிந்து செல்லலாமா? என்பதை வலியுறுத்தியது.

✷ அவ்வாறு பிரிந்து செல்வதற்கு சர்வதேசச் சட்டம் இடம்கொடுக்குமா? கியூபெக் பிரிந்து போவதனைத் தடுப்பதற்கு அல்லது அந்த விடயத்தினைக் கையாள்வதற்குச் சர்வதேச நீதிமன்றத்திற்குப் பாத்தியதை/உரிமை /அதிகாரம் உண்டா? என்ற கேள்வி எழுப்பப்பட்டது.



உலகிற்கு ஒரு புதுமை உதாரணம் கியூபெக்

✷ இந்த வகையில் கனடிய உள் நாட்டுச் சட்டமும், சர்வதேசச் சட்டமும் முரண்படும் விதத்தில் கியூபெக்கின் பிரிவினையை எவ்வாறு கையாள்வது? என்பது வினாவப்பட்டது.

✷ கனடிய உயர்நீதிமன்றத்திற்கு இவ்விடயத்தினைக் கையாள்வதற்கு பாத்தியதை/உரித்து உண்டா?

- என்பன, அவ்வழக்கின் மூலம் பெரிதும் ஆராயப்பட்டன.

இந்த நான்கு பிரதான விடயங்களையும் ஆராய்ந்த கனடிய உயர்நீதிமன்றம், கியூபெக்கின் பிரிவினை விடயத்தினை - சர்வதேச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லவிடாது, தானாகவே விவகாரத்தினைக் கையாண்டது.

இதன்படி - கனடிய சமஷ்டி அரசியல் திட்டத்தில், பிரிவினை/பிரிவினைக்கு மாறாக - அது ஜனநாயக நாடு என்பது, கனடிய அரசியல் திட்டத்தின்வழியாக உறுதியாக வரையறுக்கப்பட்டது.

எனவே - ஒரு ஜனநாயக நாட்டில் மக்கள் விருப்புக்கு மாறாக தொடுக்கப்பட்ட வழக்கினை, கனடிய உயர்நீதிமன்றத்திற்கு கையாள்வதற்கு கனடிய அரசியல் திட்டம் இடம்கொடுக்கவில்லை என்ற ஒரு காரணமும்,

அடுத்ததாக - ஐக்கிய நாடுகள் சபை வரையறுத்த சுயநிர்ணயம், அனைத்துரிமைகளும் கியூபெக்கியர்களுக்கு வழங்கப்பட்ட நிலையில், அவர்கள் பிரிந்து செல்வது எந்த விதத்திலும் நியாயபூர்வமாகாது என்ற அடிப்படையிலும்,

வழக்கின் தீர்ப்பானது - கியூபெக் மாநில அரசாங்கத்திற்கு எதிராக, அதாவது - கியூபெக் பிரிந்து செல்ல முடியாது என்பதாக அமைந்தது.

இந்நிலையில் - இவ்வழக்கின் தீர்ப்பானது புதியதொரு விடயத்தினையும் சுட்டிநிற்கின்றது. அது யாதெனில் - ஐ.நா.சபை கூறும் சுயநிர்ணயத்தின் கீழ், எந்தவொரு சமஷ்டி அரசும் பிரிந்துசெல்வது இலகுவானதல்ல என்பதை எடுத்துச் சொல்லியது.

ஆனால் - ஐ.நா.பட்டயத்தின்படி சுயநிர்ணயத்தின் ஓரங்கமாகப் பிரிந்து செல்லலாம் என்பதுதான். அதன் விதியாகும். ஆனால் - தற்போதுள்ள சர்வதேச அரசியல் உறவுகள், அப்பிரிந்து செல்வதற்கான உரிமையினை மட்டுப்படுத்தி விட்டன என்றால் அது மிகையல்ல.

அடுத்தவாரம் முதல் இக்கட்டுரைதொடரில் அமெரிக்க சமஷ்டி முறைமையினை ஆராய்வோம்.

(பிரதி செவ்வாய் தொடரும்...)

# முஸ்லிம்களைப் புறக்கணித்தால் ஆயுதமேந்தும் நிலை ஏற்படுமாம்

## ஹிஸ்புல்லாஹ் எச்சரிக்கை

சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஹக்கீம் முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாகக் கலந்துகொள்வதை ஏற்க முடியாது என தேசிய ஐக்கிய முன்னணியின் செயலாளரான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்களின் அங்கீகாரம் புறக்கணிக்கப்பட்டால் முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவும் தயாராகவுள்ளனர். இந்நிலைமை தவிர்க்கப்பட வேண்டுமாயின் எந்த ஒரு அரசியல் கட்சியும் சாராது, சுதந்திரமான முறையில் முஸ்லிம் பிரதிநிதிகள் பேச்சுக்களில் கலந்து கொள்ள வேண்டும் எனவும்,

இதுவே அனைத்து முஸ்லிம்களின் விருப்பமாகவுள்ளது எனவும் ஹிஸ்புல்லாஹ் மேலும் தெரிவித்தார்.

ஹக்கீம் பேச்சு வார்த்தை தொடர்பான விடயங்களைக் கட்சிக்குள் பகிர்ந்து கொள்ளாததாலேயே, கட்சிக்குள் பிரச்சினைகள் ஏற்பட்டதாகவும அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# களைகட்டியுள்ள பட்டாசு வியாபாரம்


(உரும்பிராய்)

பல வருடங்களின் பின்னர் யாழ். குடாநாட்டில் 'பட்டாசு வியாபாரம்' களைகட்டியுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அமைதிச் சூழலால் - நத்தார் பண்டிகை, தைப்பொங்கல் பண்டிகை என்பவற்றை முன்னிட்டு வெடிகள் விற்பனை அமோகமாக நடைபெற்று வருகின்றது.

(84)


# மூதாதைகளான அழிந்துவிட்ட புராதன விலங்குகள்



**Lepticitidium** பிரிவைச் சேர்ந்த இவற்றில் மூன்று இனங்கள் இருந்துள்ளன. மீட்கப்பட்ட புதைபடிவுகளில் இருந்து இவை மயிர்கள் அடர்ந்த தோலைக் கொண்டவை என்றும், சிறிய பூச்சியினங்களை உண்டு வாழ்ந்தவை என்றும் கண்டறியப்பட்டுள்ளது. ஏறத்தாழ அணிலின் வடிவை ஒத்தவை.



**Propalaeotherium** பிரிவைச் சேர்ந்த காட்டில் வாழ்ந்த குதிரையினங்களில் ஒன்று. இதன் புதைபடிவுகள் ஜேர்மனியில் மீட்கப்பட்டது. இதன் வயிற்றிலிருந்து தாவர இலைகளே மீட்கப்பட்டுள்ளது. இந்த இலைகளை ஆராய்ந்ததில், இவை பல மில்லியன் வருடங்கள் முன்னையது என கண்டறியப்பட்டுள்ளது.



**Ambulocetus** பிரிவைச் சேர்ந்த இவை நீரிலும் நிலத்தில் நடப்பது போன்று நடந்து கொண்டே நீந்துவதால் Ambulocetus என்ற பெயரைப் பெற்றன. இவற்றின் புதைபடிவில் இருந்து, இவை தற்கால முதலை வடிவத்தை ஒத்திருந்தன. நீரில் மெதுவாக நீந்தும் இவை, இரையை கௌவிக் கொள்ள ஏதுவாக கூரான பற்களைக் கொண்டிருந்தன.




# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த

## அரங்கம் 12

சார்லி சாப்ளின் இப்போது புகழ் பெற்றவர். கூடவே தொல்லைகளுக்கும் ஆளானார். எதிரி கம்பெனிகள், சார்லியைப் போன்றிருப்பவர்களை வைத்து அப்பட்டமாகப் பல திரைப்படங்களை உருவாக்கினார்கள். சார்லியின் சகோதரன் சிட்னி கூட கொஞ்சம் தடிமனான நாடோடியாகத் தோன்றினான்.

சார்லி சாப்ளின் அலை, உலகம் முழுவதும் வீசியது. கொமிக்ஸ் புத்தகங்களிலும், கார்ட்டூன் படங்களிலும், புத்தகங்களிலும், பாட்டுகளிலும், பொம்மை வடிவிலும் கூட சிறிய நாடோடி தோன்றினான். பிரான்ஸ் நாட்டில் அவன் பாணி நடனத்தைக்கூட ஆடினார்கள்.

சார்லி வேலையில் மூழ்கியிருந்ததால் இதெல்லாம் அவருக்கு மிகத் தாமதமாகத் தான் தெரியவந்தன. அதுவரை எந்த நடிகருக்கும் இவ்வளவு புகழோ, மக்களின் அன்போ கிடைக்கவில்லை.




1916, பெப்ரவரியில் சார்லி நியூயோர்க் சென்றார். வழி நெடுகிலும் கிடைத்த வரவேற்பில் பிரமித்துப் போனார். அவரைக் காணக் காத்திருந்த கூட்டம் பிரம்மாண்டமாக இருந்ததால், நியூயோர்க்கின் காவல் தலைவருக்கு, கிராண்ட் சென்ட்ரலுக்கு முந்தைய ரயில் நிலையத்திலேயே சார்லியை இறங்கச் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

சார்லியின் புகழ் காரணமாக ஒவ்வொரு படக் கம்பனியும் அவரைத் தங்களுடன் இணைத்துக் கொள்ளத் துடித்தனர். சிட்னி மனேஜராக இருந்து லாபமான ஒப்பந்தங்களைப் பெறுவதில் தீர்மானமாக இருந்தார். இறுதியில் 'மிச்சுவல்' படக்கம்பெனியுடன் சார்லி ஒப்பந்தம் செய்து கொண்டார். அதற்காக அவருக்கு ஒ ரு

# சார்லி சாப்ளின்

மாபெரும் தொகை கொடுககப் படவிருந்தது. அது அதுவரை திரைப் பட சரித்திரத்திலே கொடுக்கப்பட்ட அதிகமான தொகையாக இருந்தது. சார்லிக்கு அப்போது வயது இருபத்தேழு.

நடிகர்களைக் கொண்ட ஒரு சின்னக் குழுவை உருவாக்க முனைந்தார் சார்லி. அவருக்குத் தன் திறமைகள் இப்போது புரிய, தன் விருப்பப்படி திரைப்படங்களை உருவாக்கும் நிலையிலிருந்தார். ஒவ் வொரு படத்திற்கும் அதிகநேரம் செல விடலாம். நிறையப் படச்சுருளகளை உபயோகிக்கலாம். படைப்பில் நிறைவைப் பெறுவதற்கு அவர் தீவிரமானார்.

இன்றைய திரைப்படத் தயாரிப்புச் செலவுகள் அதிகமானதால், அவை குறிப்பிட்ட கால அட்டவணைப்படி எடுத்து முடிக்கப்படுகின்றன. ஆனால் சார்லியின் படங்கள் ஜீவராசிகள்போல் நிதானமாக வளர்ந்தன.

ஒரு எண்ணத்துடன் தொடங்கி அதைப் படமாக எடுப்பார். பிறகு கதாபாத்திரங்களை மாற்றுவார். அரங்க அமைப்புகளை மாற்றுவார். பிறகு அதுவரை படம் பிடித்த எல்லாவற்றையும் நிராகரித்துவிட்டு மீண்டும் புதிதாக ஆரம்பிப்பார். அடிக்கடி, என்ன படமாக்கப் போகிறோம் என்ற எண்ணமே இல்லாமல் ஸ்ருடியோவிற்குச் சென்று படப்பிடிப்பைத் தொடங்கினார்.

தங்கள் மூலமாக, சார்லியை எல்லாப் பாத்திரங்களையும் நடிக்க அனுமதிக்கும் நடிகர்கள், அவருக்குத் தேவைப்பட்டார்கள். அவர்களுடைய மனதில் சார்லி தன் முழுப் பாதிப்பை ஏற்படுத்த முயன்றார்போலும். சார்லி பல திறமைகள் உடையவர். வயலின் மற்றும் ஸெல்லோ இசைக் கருவிகளை அவரால் இசைக்க முடிந்தது. அவர் ஒரு ஜிம்னாஸ்ட், நடனக்காரர் மற்றும் ஸ்கேட்டரும்கூட.

(அடுத்த அரங்கில் தொடரும்)



**Gastornis** பிரிவைச் சேர்ந்த இந்த டைனசோர்கள் அக்காலத்தில் உலகின் பலம்வாய்ந்த ஒரு விலங்கு. ஐரோப்பா, வட அமெரிக்கப் பகுதிகளில் வாழ்ந்துள்ளன. இதன் வாயின் முன்பகுதியில் உள்ள கிளியின் அலகு போன்ற அமைப்பு கடினமான விதைகளையும் உடைக்கக் கூடியது. ஆனால்- இது தாவரபட்சணியா என்பது அதன் உடலமைப்பின் பாரிய அளவைப் பார்க்கும்போது சந்தேகம் கொள்ளவைக்கிறது சில சமயம். இது ஏனைய விலங்குகளின் உடலைத் துண்டிக்க, எலும்புகளை நொருக்க பயன்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

## அறிமுகம்



# அப்துல் கலாம்

## ( இந்திய ஜனாதிபதி )

**முழுப்பெயர்:-** அவுல் பாகீர் ஜெய்னுலாப்தீன் அப்துல் கலாம்

**தொழில்:-** விஞ்ஞானி

**பிறந்த திகதி:-** 15.10.1931

**தாய்மொழி:-** தமிழ்

**சொந்த இடம்:-** தனுஷ்கோடி, இராமேஸ்வரம் மாவட்டம், இந்தியா.

**பட்டப் பெயர்:-** இந்திய ஏவுகணை மனிதன், இந்தியாவின் ஏவுகணை தொழில் நுட்பத்தின் தந்தை, 200 சதவீத இந்தியன், காந்தீய ஏவுகணை மனிதன்.

**பாடசாலை:-** இராமேஸ்வரம் 'சாமியார்' பாடசாலை, இராமநாதபுர சுவாட்ஸ் பாடசாலை.

**கல்லூரி:-** திருச்சி சென்ஜோசப் கல்லூரி- விஞ்ஞான பட்டம்.

**உயர்கல்வி:-** சென்னை தொழில்நுட்பக்கல்லூரி- விமானப் பொறியியல்துறை.

**தந்தை:-** ஜெய்னுலாப்தீன் மரக்காயர்

**தாய்:-** அஷியம்மா

**சாதித்தவை:-** இந்திய ஏவுகணைகள்- பிருத்வி, திரிசூல் ஆகாஷ், நாக், அக்னி மற்றும் அணுகுண்டுப் பரிசோதனை.

**கவர்ந்தவர்:-** காந்தி

**பிடித்த எழுத்தாளர்:-** சுப்ரமணிய பாரதி.

**விசேட தகமை:-** வீணை வாசிக்கக் கூடியவர்.

**சுயசரிதை நூல்:-** விங்ஸ் ஒ.ஃப் பயர்

**இந்தியா குறித்த எதிர்பார்ப்பு:-** சுதந்திரம், அபிவிருத்தியும் சுயசார்பும்.

**விருதுகள்:-** பத்மபூஷன் (1981) பத்மவிபூஷன் (1990) பாரதரத்னா- (1997)

**வெளிநாட்டு கற்கை:-** அமெரிக்காவில் 1963 - 64 ஆண்டு காலப்பகுதியில் றொக்கட்டுகள் சம்பந்தமான ஆய்வு.

**பொழுதுபோக்கு:-** வாசிப்பு

**வேறுவிடயங்கள்:-** மரக்கறி உணவு மட்டுமே பிடிக்கும். பகவத்கீதையையும் குரானையும் ஒன்றாகப் படிப்பவர். பிரம்மச்சாரி.

## திரை விமர்சனம்

# ஏப்ரல் மாதத்தில்



மீண்டும் ஒரு தடவை முழுக்க முழுக்க கல்லூரி மாணவர்களை மையப்படுத்தி ஒரு திரைப்படம் வெளியாகியுள்ளது என்றால் அது 'ஏப்ரல் மாதத்தில்' தான். இடைக்காலங்களில் இத்தகைய கல்லூரிக் காதல்கதைகளே அதிகமாக வெளிவந்து கொண்டி ருந்த போதிலும், பின்னர் இந்நிலை மாறியது. 'ஏப்ரல் மாதம்' மீண்டும் ஒரு சுற்றுச்சுற்றி பழைய இடத்திற்கு வந்துள்ளது.

பொருளாதார ரீதியில் கஷ்டப்படும் மாணவனாகச் சித்தரிக் கப்படும் ஸ்ரீகாந்தின் உடைகளும் அலங்காரமும் அப்படி யான ஒரு எண்ணத்தை பார்வையாளர்களிடையே ஏற்படுத்தத் தவறிவிட்டது. இது இயக்குநர் எஸ்.எஸ்.ஸ்ரான்லியின் தவறு களில் ஒன்று. ஸ்நேகா வழமைபோல் தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியுள்ளனர்.

இப்படப்பிடிப்பு நடந்தபோதுதான் உண்மையிலேயே கார் விபத்து ஒன்றில் சிக்கி, அவரின் காலில் காயம் ஏற்பட்டிருந்தது. எனினும் படப்பிடிப்புக்குழுவிற்கு அவர் தன்னாலான பங் களிப்பை வழங்கியுள்ளார்.

காயத்ரி ஜெயராம் கவர்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள ளார். கருணாஸ் மற்றும் கங்கை அமரனின் மகனான வெங்கட் ஆகியோரின் நகைச்சுவை பெரும்பாலும் கல்லூரிப் பெண்களை நேரடியாகக் கிண்டலடிக்கும் பாணியிலேயே அமைந்துள்ளது. இது இளவயதினரை மட்டுமே கவரக்கூடி யதாக இருக்கும். கல்லூரி வாழ்க்கை என்றால் படிப் பைத்தவிர மற்றவையெல்லாம் செய்யலாம் என்ற பாணியில்- கன்ரீனுக்குள் கும்மாளம், புகைப்பிடிப்பது, பியர் குடிப்பது, பெண்களுக்குப்பின் நடனமாடிச் செல்வதுதான் என்றவாறு இயக்குநர் காட்சிகளைப் படைத்திருப்பது நெருடலான விட யம்.

ஒளிப்பதிவாளர் எம்.வி.பன்னீர்செல்வத்தின் ஒளிப்பதிவுக்கு பாராட்டலாம். இறுதிக்காட்சியில் மழையின் மத்தியில் கல்லூரியில் நின்ற பாரிய மரத்தைத் தறித்து வீழ்த்தும் காட்சி தத்ரூபமாக அமைந்துள்ளது. இதற்கேற்றால்போல் காட்சியின் அழுதத்திற்கு ஏற்ப பின்னணி இசை வழங்கிய யுவன் சங்கர் ராஜாவும் முத்திரை பதித்துள்ளார். இயக்குநர் எஸ்.எஸ்.ஸ்ரான்லியும் சில இடங்களில் காட்சியமைப்பை தத்ரூபமாக்கியிருக்கத்தான் செய்துள்ளார்.ஸ்ரீகாந்தின் தம்பியார்- விருந்தில் முள்ளுக் கரண்டியால் உண்ண முடியாது தத்தளிப்பது, அவருக்கு ஸ்நேகா உதவ முன்வருவது மற்றும் ஸ்ரீகாந்தின் வீட்டு ஏழ்மைநிலை என்பன மனதில் பதியக் கூடியவாறு இயக் குநர் மெருகூட்டியுள்ளார்.

வழமையான கதையைப் புதிய பாணியில் இயக்குநர் சொல்ல முற்பட்டிருக்கின்றார். இளம் வயதினரைக் குறிவைத்தே எடுக்கப்பட்ட படம்போல் தோன்றுகிறது. மொத்தத்தில் சரா சரித் தமிழ்ப்படமே.

-துஷி.

# கணவன் மனைவி உறவுக்கு ஆசை இருத்தல் வேண்டும்

(சென்றவாரத் தொடர்ச்சி)

உங்களுக்கு உங்கள் கணவரில் கோபம் ஏற்பட் டதனால் நீங்கள் கூடாத பெண் என்று கூறமுடியாது. அதேபோன்று உங்கள் மனைவி மீது கோபம் வந்த தற்காக நீங்கள் கூடாத கணவன் என்று கூறவும் முடி யாது.

இருப்பினும் உங்களுக்குள் ஏற்பட்ட உணர்வுக் கேற்ப செயற்பட்டால், அச்செயலுக்குப் பொறுப்பாளிகள் நீங்களே ஆகும். கோபம் என்பது உணர்வுதான். ஆனால் கோபத்தில் மற்றவரை அடித்தால் அது உணர்வல்ல. அவ்வாறு அடித்தது உள்விருப்பத்தோடு ஏற்பட்ட செயலாக இருப்பதால் அதை பிழை என்று பலர் தீர்ப்பிட இடமுண்டு. ஆகவே செயலைத் தீர்ப்பிடமுடியும். ஆனால் உணர்வைத் தீர்ப்பிடமுடியாது.

### உணர்வை வெளிப்படுத்துதல்.

உண்மையில் கணவன், மனைவிக்கிடையிலுள்ள உறவை நல்ல விதத்தில் வளர்த்துக்கொள்வதனால் ஒருவர் ஒருவருக்குள் ஏற்படும் உணர்வை வெளிப்ப டுத்தவேண்டும். திருமணமாகிய இருவரும், ஒருவர் மற்றவரில் ஏற்படும் உணர்வை வெளிப்படுத்தாமல் அடக்கிவைப்பதைக் கண்டிருப்பீர்கள்.


சில உணர்வுகள் பிழையானவை என்று நினைத்து அவவாறு அடக்கி வைக்க முயலுகிறோம். உணர்வு களைச் சரி என்றோ, பிழை என்றோ ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை ஏற்றுக்கொண்டால் அவற்றைச் சரியான விதத்தில் வெளிப்படுத்துவது பிழை அற்றது என்பதை ஏற்கவேண்டும்.

உணர்வை வெளிப்படுத்துவது பிழையற்றது என்பதை மட்டுமல்ல கணவன், மனைவி உறவை நல்ல விதத்தில் ஏற்படுத்திக் கொள்வதும் முக்கியமான தாகும்.

ஒருவர் மற்றவரைப் புரிந்துகொண்டு வாழ்வதற்கு இருவருக்கிடையிலும் நிரந்தரமாகத் தொடர்பை ஏற்ப டுத்தப் பழகிக்கொள்ள வேண்டும். கருத்துக்களையும், உணர்வுகளையும் பரிமாறிக்கொள்ள வேண்டும்.

கருத்துக்களை பரிமாறிக்கொள்ள, உணர்வுகளைப் பரிமாறிக்கொள்ள "இருவரும் கதைத்தல்" வேண்டும். கதைக்காமல் தொடர்பை வளர்த்துக்கொள்வது கடின மாகும்.

ஆதலால் விவாகம் முடித்து வாழும் எல்லாத் தம்பதி களுக்கும் தொடர்பை வெளிப்படுத்த விருப்பமும் ஆயத்தமும், திறமையும் இருக்க வேண்டும். சில தம்பதி யினருக்குக் கதைக்க, கலந்துரையாட நேரம் இல்லாதிரு க்கின்றது. இது மிகவும் கவலைக்குரிய நிலையாகும். தொடர்பை வெளிப்படுத்த நேரத்தைத் தேடிக் கொள்ளவேணடும். நேரத்தைத் தேடிக்கொள்ளாது விவாகம் முடிக்க வேண்டுமா? அப்படிப்பட்ட



இருவர் தமது தொடர்பை எப்படி வளர்த்துக் கொள்ளுவது? ஆகக் குறைந்தது ஒரு நாளைக்கு 30 நிமிடமாவது அல்லது 20 நிமிடமாவது ஒருவர் மற்றவருடன் தமது கருத்தை, உணர்வை, அனுப வத்தைக் கலந்துரையாடவேண்டும்.

விவாகம் முடித்து ஆறுமாதம் ஆகும்பொழுது தம்முடைய உறவு குறைகின்றதை ஒரு தம்பதி யினர் உணர்ந்தனர். அதைத் தேடிப்பார்த்தபோது ஒரு உண்மை புலப்பட்டது.

ஆறு மாதங்களுக்கு முன் இந்த இளைஞன் (கணவன்) ஒரே நேரத்தில் இரு புதிய வேலைகளை ஆரம்பித்தார். அதில் ஒன்று திருமணம் முடித்தது. மற்றது பஸ்வண்டியை விலைக்கு வாங்கியது.

மனைவியைச் சந்தோசப்படுத்துவதற்காக அதி காலையில் எழுந்து பஸ்ஸை ஓட்டி பணம் சம்பாதித் தார். ஆகக்கூடுதலாகப் பணம் சம்பாதித்து இரவா கியே வீடு திரும்புவார். இதனால் காலையிலும்,பக லிலும், இரவிலும் இருவருக்கும் கதைக்க நேரம் கிடைக்க வில்லை, உணர்வுகள், கருத்துக்களை வெளிப்படுத்த நேரம் கிடைக்காததால் இருவரது உறவும் பலவீன மாகத் தொடங்கியது. கணவன் தன்னை அறியாம லேயே மனைவியைத் திருமணம் முடிக்காது பஸ் வண்டி யையே திருமணம் முடித் துள்ளார். ஒருநாளைக்கு 16 மணித்தியாலம் பஸ வண்டியுடனும், தனது மனைவி யுடன் சில நிமிடங்களுமே காலத்தைக் கழித்தார்.

விவாக வாழ்வை வெற்றிகரமாக அமைக்க ; கணவன், மனைவி இருவரும் உணர்வுகள், கருத் துக்களைத் தெரிவிக்க நேரத்தை ஒதுக்குவது முக்கியமானதாகும்.

(அடுத்த வாரம் தொடரும்)

- எஸ்.ஜே. யோகராஜா

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

செயல் எவ்வாறானது என்பதல்ல
எப்படிச் செயற்படுகிறது என்பதிலேயே அதன்
சிறப்புத் தங்கியுள்ளது.
- *சுவாமி விவேகானந்தர்.*

# நமது நோக்கு

## நம்பிக்கையான சேவை பாவனையாளருக்கு வேண்டும்!

யாழ்.குடாநாட்டு மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாக மாறியுள்ள தொலைபேசிச் சேவை - யாழ்.மக்களைப் பொறுத்தளவில் 'கண்ணாமூச்சி' காட்டும் ஊடகமாகவே தொழிற்படுகின்றது.

யாழ்.குடாநாட்டின் தொலைபேசிச் சேவையில் அடிக்கடி ஏற்படும் குளறுபடிகளும், ஸ்தம்பிதங்களும் - யாழ்.குடாநாட்டு மக்களை சலிப்பூட்டவே வைக்கின்றன.

கடந்த வாரத்தில் மட்டும் - பல தடவைகள இந்த தொலைபேசிச் சேவைச் சீர்கேடு, மக்களைப் பாதித்தது.

குடாநாட்டைப் பொறுத்தவரை - தொலைபேசிச் சேவையின் முக்கியத்துவமும், பாவனையும் தொடர்ச்சியான வகையில் ஆர்முடுகலாக அதிகரித்தே வருகின்றன.

யாழ்.குடாநாட்டுக்குள்ளேயான உள்ளூர்ச் சேவைகளோடு - வெளியுலகத் தொடர்பிற்கான பிரதான ஊடகமாக மாறியுள்ள தொலைபேசிச் சேவை - சாதாரண மக்களிலிருந்து அரச, தனியார் துறைகள், பொது அமைப்புக்கள், உடனடிப் பணிகளில் ஈடுபடுவோர், வர்த்தகர்கள் எனப் பல தரப்பட்டோரினதும் அவசர, அவசியத் தொடர்புகளைத் தாங்கிநிற்பதாக உருவாகியிருக்கும் நிலையில் -

இச்சேவையை - ஒழுங்காகவும், இடையூறுகளற்றதாகவும் வழங்க வேண்டிய கடமை சம்பந்தப்பட்டோருக்கு உண்டு.

குறிப்பாக - குடாநாட்டை வன்னிப் பெருநிலப் பரப்புடனும், தென்பகுதியுடனும் இணைக்கும் தரைவழிப் போக்குவரத்து, பகற்பொழுதுக்கு மாத்திரமே அனுமதிக்கப்பட்டு வரும் நிலையில் - யாழ்ப்பாணத்தை 24 மணி நேரமும் வெளியுலகுடன் இணைப்பதற்கு தொலைபேசிச் சேவையொன்றே வழியாகவும் வாய்ப்பாகவும் உள்ளது.

அத்துடன் - பயணத்தொலைவு அதிகமாகவிருக்கும் புவியியற் காரணத்தினால் - அவசரத் தொடர்புகளை மேற்கொள்ளவும், தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவுமான ஒரேயொரு வழி தொலைபேசிச் சேவையாகவே உள்ளது.

இவ்வாறான சூழலில் - கடந்த காலத்தைவிட, வெளியுலகுடனான தொடர்புகள், தேவைகள் அதிகரித்துவிட்ட நிலையில் - தொலைபேசிப் பாவனையாளர்களின் நம்பிக்கையைப் பெறவேண்டியவர்களாக, தொலைபேசிச் சேவையை வழங்குபவர்கள் உள்ளனர்.

இந்த நம்பிக்கையையும், தேவைகளையும் சலித்துப்போகச் செய்யும் எத்தகைய இடையூறுகளும் தொடராமல் பாதுகாக்கும் பொறுப்பும் அவர்களுக்கு உண்டு. அதனை அவர்கள் செவ்வனே மேற்கொள்வதும், சேவையின் தரத்தையும், நீடிப்பையும் பேணுவதும் - பாவனையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளேயாகும்.

அதேவேளை - யாழ்.பிராந்திய ரெலிகொம் நிறுவனத்தினர் கவனிக்க வேண்டிய சில அவசியமான விடயங்களும் உள்ளன.

அவசர உதவிக்கானதும், வீடுமுறை தினங்களுக்கானதுமான உடனடித் திருத்தச் சேவை பற்றாக்குறையாக இருப்பதாகப் பாவனையாளர்கள் மத்தியில் எழுந்துள்ள அதிருப்தியைப் போக்க ரெலிகொம் முயற்சிக்க வேண்டும்.

புதிய தொலைபேசி இணைப்புக்கள் பெருமளவில் எதிர்பார்க்கப்படும்போது - அவற்றைப் பூர்த்தி செய்யக்கூடியதாக ஒழுங்குள் துரிதப்பட வேண்டியதும் உடனடித் தேவையாகவுள்ளது.

பாரிய அபிவிருத்திப் பணிகளை எதிர்நோக்கி நிற்கும் நேரத்தில் - ரெலிகொம் நிறுவனமும் தனது சேவைகளை அதற்கேற்ற விதத்தில், தராதரத்தில் பேணுவதும் வழங்குவதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்விடயத்தில் ரெலிகொம் கூடிய கவனமெடுத்து, தனது தரமான சேவையை முழுமையாக யாழ்.மக்களுக்கு வழங்கும் என்ற நம்பிக்கையுடன் யாழ். மக்கள் காத்து நிற்கின்றனர்.

# மீளக் குடியமர்வுக்கு முன்னர் தமிழ் மக்களை கண்காணிப்புக்குழு சோதனையிட வேண்டும்!

## படைத்தரப்பு கோரிக்கை

(கொழும்பு)

உயர்பாதுகாப்பு வலயங்களில், மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு முன்னர், அவர்களிடம் ஆயுதங்கள் உள்ளனவா எனச் சர்வதேச யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு சோதனையிடுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் எனப் படைத்தரப்பிலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவினால் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட வரைபின் அடிப்படையில்தான் படைத்தரப்பு இந்தக் கோரிக்கையை முன்வைத்திருப்பதாக தெரியவருகின்றது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ரெய்ட்டர் ரொக்கெல்சன், சரத் பொன்சேகாவினால் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட வரைபினைத் தாம் விரிவாக ஆராய்ந்து வருவதாகக் கூறியுள்ளார். இது, ஒரு தரப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டமே தவிர, இறுதிமுடிவு இரண்டு தரப்புக்களும் கலந்துரையாடியே எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை -

குடாநாட்டுக்கான இராணுவத் தளபதி தெரிவித்தது ஒரு சிபாரிசுதான் என்றும், இந்த விடயத்தில் புலிகள் வேகமாகச் செயற்பட்டு நடைமுறைப்படுத்துவார்கள் எனத் தான் நம்புவதாகவும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்

# மோதலின்றி ஒருவருடம் கழிந்தது யுத்த நிறுத்தத்துக்கு பெரிய வெற்றி

## இராணுவப் பேச்சாளர் சனத் கருணாரட்ண

(கொழும்பு)

கடந்த ஒருவருடம் எந்த பாரிய மோதலும் இன்றி கழிந்து போனது. யுத்தநிறுத்தத்துக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

கடந்த ஒருவருடத்தில் எந்தப் பாரிய வன்முறையும் இடம் பெறவில்லை. இது யுத்தநிறுத்தத்துக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி. இந்த வெற்றியானது இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வினைக் கொண்டுவர உதவும் என நம்பிக்கை தெரிவித்த பிரிகேடியர் சனத் கருணாரட்ண, கடந்த மேமாதம் கடலில் இடம்பெற்ற ஒரு மோதலை விட வேறெந்த பாரிய சம்பவமும் இடம்பெறவில்லை என்றும், இது தமக்கு மகிழ்ச்சி தருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை - யுத்தநிறுத்தம் வெற்றிகரமாக அமுல் செய்யப்பட்டு வருவதாகவும், நூற்றுக்கணக்கான யுத்தநிறுத்த மீறல் முறைப்பாடுகள் கிடைக்கின்றபோதும், புரிந்துணர்வு உடன்பாட்டைப் பாதிக்கக் கூடியதான எந்தப் பாரிய சம்பவமும் இடம்பெறவில்லை என்பது நிம்மதியைத் தரும் விடயம் என யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

# கனடாவுக்கு அனுப்புவதாக ஏமாற்றிய இரு ஆபிரிக்கர்கள்!

## விமான நிலையத்தில் சிக்கினர்

(கொழும்பு)

கனடாவில் வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி, பத்து இலங்கையரிடம் பணம் பெற்றுக்கொண்டு தப்பிச் செல்ல முயன்ற இரண்டு ஆபிரிக்க நாட்டவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் சிம்பாப்வே நாட்டைச் சேர்ந்தவர். மற்றவர் கமரூன் நாட்டைச் சேர்ந்தவராவார்.

இவர்களிடம் 40 லட்சம் இலங்கை ரூபாவும், ஒரு லட்சம் அமெரிக்க டொலரும் விமானநிலையப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இவர்கள் மேல்விசாரணைகளுக்காகப் பொலிஸாரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

# கடத்தப்பட்ட வரதர் அணி உறுப்பினர் மண்டூர் வாவியில் சடலமாக மீட்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் மண்டூரில் கடந்தவாரம் காணாமற்போன ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி உறுப்பினரின் சடலம் வெட்டுக்காயங்களுடன் வாவியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது- வெல்லாவெளிப் பிரதேசசபையின் உபதலைவரும், ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி உறுப்பினருமான பூபாலபிள்ளை அழகு என்பவர் கடந்த 16 ஆம் திகதி முதல் காணாமற்போயிருந்தார்.

இவரது சடலம் நேற்றுமுன்தினம் காலை மண்டூர் வாவியல் இருந்து மீட்கப்பட்டிருக்கின்றது. சடலத்தில் பலத்த வெட்டுக் காயங்கள் காணப்பட்டுள்ளன. பொலிஸார் இச்சம்பவம தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# 'கடலோரக்காற்று' திரைப்படம் 31 ஆம் திகதி வெளியிடப்படும்

(வவுனியா நிருபர்)

கேசவனின் இயக்கத்தில் உருவான ஷகடலோரக்காற்று' திரைப்படம் எதிர்வரும் 31 ஆம் திகதி தாயகப்பிரதேசத்தில் அனைத்து மாவட்டங்களிலும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளதாக நிதர்சனம் நிறுவனத்தின் திரைப்பட உருவாக்கற் பிரிவு அறிவித்துள்ளது.

பாரிசில் நடந்த மாவீரர் நாளில இத்திரைப்படம் வெளியிட்டு வைக்கப்பட்டிருந்தது. தாயகப்பகுதிகளில் 31 ஆம் திகதி இத்திரைப்படம் வெளியிடப்படவுள்ளதுடன், வெளியீட்டு நிகழ்வுளில் - இத்திரைப்படம் தொடர்பான விமர்சனங்கள் அடங்கிய கலந்துரையாடல்களும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இடம் பெயர்ந்த சிங்கள மக்களின் விபரம் திரட்டுகிறது புனர்வாழ்வு அமைச்சு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த சிங்கள மக்கள் குறித்த விபரங்களைத் திரட்டுமாறு புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் உத்தரவிட்டுள்ளார்.

இடம்பெயர்ந்த சிங்கள மக்களுக்கு புனர்வாழ்வு அமைச்சு எந்த உதவிகளையும் வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டினைத் தொடர்ந்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக சிங்கள அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

இதேவேளை, வட- கிழக்கில் யுத்த சூழல் காரணமாக வீடுகளை விட்டு வெளியேறிய சிங்கள மக்களின் நலனில் எந்த அமைப்பும் அக்கறை செலுத்துவது இல்லை என்றும், வெறுமனே புகார்கள் செய்வதிலும் விமர்சனங்களை செய்வதிலும்தான் இவை ஈடுபட்டிருப்பதாகவும் அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

சிஹல உறுமயவின் பிரதிச் செயலாளரான உதய கமன் பிரிய இது குறித்து தெரிவிக்கையில், வட-கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த சிங்கள மக்கள் குறித்துச் சரியான புள்ளி விபரங்கள் எதுவும் திரட்டப்படவில்லை என்றும், சுமார் 1 இலட்சத்து 28 ஆயிரம் பேர் இவ்வாறு இடம்பெயர்ந்திருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த சிங்கள மக்களின் விபரங்களைத் திரட்டும் பணிக்கு யு.என்.எச்.சி.ஆரின் உதவியும் கோரப்பட்டுள்ளது.

# இந்திய பயணிகள் கப்பல் சேவைக்காக கொழும்புத் துறைமுகத்தில் வசதிகள்

## வேகமாக நடைபெறும் புனரமைப்புப் பணிகள்

கொழும்புத் துறைமுகத்தின் பயணிகள் இறங்குதுறையை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்காகவே, கொழும்புத் துறைமுகத்தின் பயணிகள் இறங்குதுறை புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கொழும்புத் துறைமுகத்தின் பயணிகள் இறங்குதுறை நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாமல் இருந்துவந்துள்ளது. இதனைத் திருத்தியமைத்து நவீனமயப்படுத்துவதற்கு சுமார் மூன்று மில்லியன் ரூபா தேவைப்படுவதாக துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

கப்பல் பயணிகளுக்கு அவசியமான அனைத்து வசதிகளையும் இறங்குதுறையில் ஏற்படுத்திக் கொடுக்கும்வகையில் புதிய கட்டட வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. அத்துடன் - பொருட்களையும், பயணிகளையும் சோதனையிடுவதற்காக சுங்கத்திணைக்களத்தின் அலுவலகங்களும் புதிதாக அமைக்கப்பட்டுவருகின்றன.

விரைவில் - தூத்துக்குடிக்கும் கொழும்பிற்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இதற்கான பேச்சுவார்த்தைகளில் இந்திய - இலங்கை அதிகாரிகள் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கு அனைவரும் பொறுப்பேற்க வேண்டும்!

## விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா உரை

விளையாட்டுத்துறையைச் சர்வ தேசரீதியில் வளர்த்தெடுக்க வேண்டிய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம். இந்த வகையில் விளையாட்டுத்துறையை வளர்க்க வேண்டிய கடமை எல்லோரிடத்திலும் இருக்கின்றது. இவ்வாறு தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்தார்.

கிளிநொச்சி மத்திய விளையாட்டுத்திடலில் கடந்த வெள்ளிக்கிழமை, கிளிநொச்சி மாவட்ட அணிக்கும் லண்டனிலிருந்து வந்த இடம்பெயர்ந்த தமிழர்கள் அணிக்கும் இடம்பெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

லண்டன் மாநகரில் இருந்து தமிழீழத்திற்கு ஒரு விளையாட்டு அணி வந்தமைக்கு நன்றி கூறுவதோடு, மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

மக்கள் சந்தோசமாக இருக்கும் இச்சூழ்நிலையில் எமது பகுதி விளையாட்டுத்துறை கடும் வீழ்ச்சியாகவே இருக்கின்றது. எனினும், எதிர்காலத்தில் சிறந்த விளையாட்டு வீரர்கள் உருவாகுவார்கள் என்பது உறுதி. அதற்கான கட்டமைப்பையும் நாம் நிறுவியுள்ளோம்.

லண்டனில் இருந்து வந்த அணியினர் எமது உறவுகள். இவர்களின் தாய் தந்தையர் பல ஆணடுகளுக்கு முன்பே லண்டனில் குடியமர்ந்தவர்கள். எமது மண்ணைப் பற்றி நிறைய அறிந்துள்ளார்கள். எமது மண்ணில் நிறைய சேவைகள் செய்யவேண்டும் என்பது இவர்களது விருப்பமாக உள்ளது.

தமிழீழத்தில் ஒவ்வொரு மைதானத்தையும் தெரிவுசெய்து, ஒரு இறுக்கமான, திடமான மைதானமாக அமைப்பது தமிழீழ விளையாட்டுத்துறையின் உன்னதமான நோக்கமாக நாம் கருதுகின்றோம்.

இதனூடாக சிறந்த வீரர்களை பயற்றுவித்து, தெரிவு செய்து, பயிற்சி வழங்கி தலைசிறந்த அணிகளை உருவாக்கமுடியும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

### வடக்கு - கிழக்கு மக்களுக்கு

# 100 கோடி ரூபா நிவாரண உதவி!

## வழங்கியதாக புனர்வாழ்வு அமைச்சு அறிவிப்பு

(நமது நிருபர்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இந தவருடம் முதல் 3 தவணைக் காலப்பகுதியில், 100 கோடி ரூபாவை இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரண உதவியாக புனர்வாழ்வு அமைச்சு வழங்கியுள்ளது.

இதற்கு மேலதிகமாக 38 ஆயிரம் மெற்றிக்தொன் அத்தியாவசிய மற்றும் உலர் உணவுப் பொருட்களும் அனுப்பி வைக்கப்பட்டன.

இங்குள்ள 96 நலன்புரி நிலையங்கள் மூலம் இவை அனைத்தும் இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படடதுடன், சொந்த ஊருக்குத் திரும்புவதற்கும போக்குவரத்து வசதிகள், அமைச்சினால் வழங்கப்பட்டன என்றும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அமைச்சு, மேலும் 8 இலட்சம் மக்களுக்கு இந்த நிவாரணங்களைப் வழங்கி வருகிறது. மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்துள்ளது.

# குடாநாட்டுத் தொழிற்சாலைகளை புனரமைக்க 2 கோடி ரூபா தேவை

## கைத்தொழில் அதிகாரசபைத் தலைவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தொழிற்சாலைகளின் உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுக்க இருப்பதாக, கைத்தொழில் அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.

சபையின் தலைவர் கலாநிதி பந்துல பெரேரா மேற்கண்ட அறிவிப்பை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சேதமடைந்த வீடுகள், சொத்துக்கள் சம்பந்தமாகவே நஷ்டஈடு வழங்கப்படவேண்டும். யாழ்ப்பாணத்திலும், அச்சுவேலியிலும் உள்ள 25 தொழிற்சாலைகளைப் புனரமைப்பதற்கு இரண்டு கோடி ரூபா தேவைப்படும்.

இதுதொடர்பாக விரிவான அறிக்கையொன்று கைத்தொழில் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படும் என்று பந்துல பெரேரா மேலும் தெரிவித்தார்.

# நிரந்தர வைத்தியரின்றி வரணி வைத்தியசாலை

வரணி வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இல்லாததினால், நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

அங்கு தற்பொழுது கடமையில் உள்ள வைத்தியர் - காலையில் மட்டுமே நோயாளர்களைப் பார்வையிடுவதோடு, வேறு இடத்திலும் பதில் கடமையாற்றுகின்றார் எனத் தெரியவருகின்றது.

முன்பு முழுநேரமும் இயங்கிய இவ்வைத்தியசாலை தற்போது முழுமையாக இயங்காததினால் நோயாளர்கள் பல கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். (62,92)



நாவற்குழி உயிர்ப்பூட்டல்குழுவின் சமாதான ஒளியேற்றல் நிகழ்வில் - இந்துமதகுருவுடன் , கிறிஸ்தவ மதகுரு இரவிச்சந்திரன் அடிகளார் இணைந்து நிற்கும் காட்சி.

# வயோதிபரைக் கடித்தார் சித்த சுவாதீனமற்ற இளைஞன்

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கில் வயோதிபர் ஒருவரை, சித்த சுவாதீனமற்ற இளைஞன் ஒருவர் கடித்துக் குதறியுள்ளார்.

கடந்த புதன்கிழமை இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து, திடீரென வாலிபன் வயோதிபரைக் கடித்துக் குதறியதாகத் தெரியவருகின்றது.

இச்சம்பவத்தில் க.நவரத்தினராசா (வயது 86) என்பவரே காயமடைந்தவராவார். இவர் புன்னாலைக்கட்டுவன் மத்திய மருந்தகத்திற்குச் சிகிச்சைக்காக சென்றபோது மேலதிக சிகிச்சைக்காக தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக்குச் செல்லுமாறு வைத்திய அதிகாரியால் அறிவுறுத்தப்பட்டார். (83)


# வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஐந்தில் HAPPY BIRTHDAY



பெயர் : செ.விதுஷிகா
முகவரி : 2ம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு.



அகவை ஆறில்



பெயர் :பா.வத்சலா
முகவரி: கணுக்கேணி, முள்ளியவளை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி:------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------------------------
பெற்றார் ஒப்பம்

# புன்னாலைக்கட்டுவனில் வீடுகளுக்கு இலக்கங்களிடும் இராணுவத்தினர்!

(புன்னாலைக்கட்டுவன்)

மக்கள் மீளக்குடியமர்வதற்கு அண்மையில் இராணுவத்தினரால் அனுமதி மறுக்கப்பட்ட புன்னாலைக் கட்டுவன் வடக்குப் பிரதேசத்திலுள்ள கட்டடங்களுக்கு, இராணுவதினர் இலக்கங்கள் இட்டு வருகின்றனர்.

இப்பகுதியிலுள்ள கோவில்கள், வீடுகள் மற்றும் சேதமடைந்துள்ள ஏனைய கட்டடங்கள் அனைத்திலும் இலக்கங்கள் இடப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (83)

# ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியில் ஏ-9 வீதி புனரமைப்பு விரைவில்

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கி யின் நிதி உதவியுடன் ஏ-9 வீதியைப் புனரமைக்கும் நடவடிக்கை மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சேதமடைந்த நிலையில் காணப்படும் மேற்படி வீதியைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டு வருகிறது.

இப்புனரமைப்பு வேலைகளுக்கான நிதியை, ஆசிய அபிவிருத்தி வங்கி வடக்கு புனர்வாழ்வு அமைச்சின் ஊடாக வழங்கியுள்ளது. மேற்படி திருத்த வேலைகளுக்கான ஆரம்ப ஏற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (க)

### பாடசாலை மாணவர்களின்

# ஆக்கத் திறனை மேம்படுத்த கல்வி அமைச்சு ஏற்பாடு

அடுத்த ஆண்டு முதல் பாடசாலை மாணவர்களின் ஆக்கத் திறன்களை மேம்படுத்தும் நோக்குடன், கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டிகளை விரிவுபடுத்தக் கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. தாய்மொழிக் கல்வியுடன் இணைந்து அமுல்ப்படுத்தும் திட்டங்கள் தயாரிக்கப்படுவதாகவும், கடநத காலங்களைப் போலல்லாது மாணவர்களின் ஆர்வத்தை அதிகளவில் தூண்டும் திட்டமாகப் புதிய கல்விச் சீர்திருத்தப் பாடத்துடன், இத்திட்டம் அமுல்படுத்தப் படவுள்ளது. (96)

## 'கனவுகள்' தெருவழி நாடகம்

(வவுனியா நிருபர்)

புதுவை அன்பனின் தயாரிப்பிலான 'கனவுகள்' தெருவெளி நாடகம் மன்னாரில் பரவலாக அரங்கேற்றப்பட்டு வருகின்றது.

# கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 56 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்!

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து ஐம்பத்தாறு ஆசிரியர்களுக்கு 'இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றி, சுய விருப்பின் அடிப்படையில் வேறு மாவட்ட இடமாற்றத்திற்கு விண்ணப்பித்த ஆசிரியர்களுள் 56 பேருக்கு மாகாணக்கல்வி அமைச்சு இடமாற்றம் வழங்கியுள்ளது.

கண்டாவளைக் கோட்டத்தில் இருந்து 17 பேரும், கரைச்சிக் கோட்டத்தில் இருந்து 17 பேரும், பூநகரி கோட்டத்தில் இருந்து 22 பேரும் இவ்வாறு இடமாற்றம் பெற்றுள்ளனர்.

இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம், உரிய வலயத்தில் கடமையில் ஈடுபடும்படி மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் எஸ்.சுப்பிரமணியம், சகல வலயக்கல்விப்பணிப்பாளர்களுக்கும் சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

# மாவட்ட ரீதியில் Z வெட்டுப்புள்ளி விபரம்

| கற்கைநெறி / மாவட்டம் | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | மாத்தளை | கண்டி | நுவரெலியா | காலி | மாத்தறை | அம்பாந்தோட்டை | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | மன்னார் | முல்லைத்தீவு | வவுனியா | திருகோணமலை | மட்டக்களப்பு | அம்பாறை | புத்தளம் | குருநாகல் | அநுராதபுரம் | பொலநறுவை | பதுளை | மொனறாகலை | கேகாலை | இரத்தினபுரி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. மருத்துவம் | 1.9001 | 1.6544 | 1.6091 | 1.4125 | 1.8000 | 0.8629 | 1.8236 | 1.8802 | 1.6145 | 1.7853 | 1.3893 | 0.9191 | 1.1744 | 1.7940 | 1.3479 | 1.4726 | 1.4946 | 1.5876 | 1.7477 | 1.5757 | 1.2086 | 1.4415 | 1.0480 | 1.6063 | 1.5742 |
| 2. பல் மருத்துவம் | 1.8547 | 1.6298 | 1.5936 | 1.3625 | 1.7807 | 0.8191 | 1.8132 | 1.8477 | 1.6066 | 1.7767 | 1.3137 | 0.8444 | 1.1743 | 1.7542 | 1.6062 | 1.4486 | 1.4831 | 1.5348 | 1.7357 | 1.5586 | 1.2017 | 1.4243 | 1.0417 | 1.5912 | 1.5577 |
| 3. விலங்கு விஞ்ஞானம் | 1.7960 | 1.5876 | 1.5618 | 1.4019 | 1.7528 | 0.7791 | 1.7929 | 1.7969 | 1.6047 | 1.7519 | 1.3003 | 0.6642 | 1.1514 | 1.7365 | 1.3435 | 1.3586 | 1.4346 | 1.5167 | 1.7315 | 1.5315 | 1.2005 | 1.3901 | 0.9892 | 1.5678 | 1.5364 |
| 4. விவசாயம் | 1.4313 | 1.2018 | 1.1940 | 1.0284 | 1.3425 | 0.4982 | 1.3702 | 1.3792 | 1.3481 | 1.3489 | 0.8597 | 0.4465 | 1.0157 | 1.2676 | 1.2129 | 1.1783 | 1.2444 | 1.1814 | 1.2905 | 1.2060 | 0.8949 | 1.1320 | 0.7924 | 1.2617 | 1.2252 |
| 5. உணவும் ஊட்டமும் | 1.4561 | 1.3204 | 1.3352 | 1.1204 | 1.3901 | 0.6274 | 1.3608 | 1.4812 | 1.3877 | 1.3572 | 0.8634 | 0.4110 | 1.0046 | 1.4242 | 1.1180 | 1.3579 | 1.4193 | 1.2778 | 1.2940 | 1.1301 | 0.9737 | 1.1311 | 0.8835 | 1.3076 | 1.2130 |
| 6. உயிரியல் | 1.5497 | 1.3637 | 1.3293 | 0.9042 | 1.3991 | 0.3984 | 1.3783 | 1.2942 | 1.2040 | 1.1906 | 0.6715 | 0.4008 | 0.7418 | 1.1915 | 0.8815 | 1.0740 | 0.9473 | 1.0828 | 1.3654 | 1.0609 | 0.7899 | 0.8629 | 0.6202 | 1.1803 | 1.1762 |
| 7. பிரயோக விஞ்ஞானம் (உயிரியல்) | 1.3525 | 1.1784 | 1.1752 | 0.8696 | 1.3391 | 0.3455 | 1.3483 | 1.2700 | 1.1971 | 1.1712 | 0.6243 | NQC | 0.6821 | 1.1743 | 0.8646 | 1.0694 | 1.1266 | 0.9788 | 1.2752 | 1.0385 | 0.6699 | 0.7866 | 0.5562 | 1.1676 | 1.1358 |
| 8. பொறியியல் (MPR) | 1.8948 | 1.5593 | 1.5888 | 1.4892 | 1.7562 | 0.7767 | 1.8685 | 1.8583 | 1.6338 | 1.8293 | 1.4480 | 1.1755 | 1.7069 | 1.7611 | 1.1814 | 1.2740 | 1.3131 | 1.5237 | 1.6812 | 1.5205 | 0.8766 | 1.3909 | 0.7676 | 1.5988 | 1.5780 |
| 9. பொறியியல் (EM) | 1.7467 | 1.5054 | 1.5352 | 1.4447 | 1.6600 | 0.7074 | 1.7570 | 1.7604 | 1.5334 | 1.7602 | 0.9917 | 1.0014 | 1.5603 | 1.5214 | 1.1181 | 1.2511 | 1.2838 | 1.5073 | 1.6695 | 1.4825 | 0.6924 | 1.3235 | 0.7564 | 1.5877 | 1.5452 |
| 10. பொறியியல் (TM) | 1.8224 | 1.4873 | 1.5794 | 1.4873 | 1.6862 | 0.6729 | 1.8357 | 1.7996 | 1.6089 | 1.8261 | 1.3005 | 1.0917 | 1.6986 | 1.5283 | 1.1322 | 1.2614 | 1.2642 | 1.4972 | 1.6698 | 1.5024 | 0.8344 | 1.3432 | 0.7387 | 1.5976 | 1.5432 |
| 11. கணிய அளவீடு | 1.4498 | 0.8427 | 1.4234 | NQC | 1.1036 | NQC | 1.5190 | 1.3515 | 1.5501 | 1.5504 | 0.8139 | NQC | 1.4134 | 1.3956 | 1.0121 | NQC | 1.1851 | NQC | 1.3017 | 1.4728 | NQC | 0.4629 | NQC | 1.3222 | 1.0213 |
| 12. கணினி விஞ்ஞானம் | 1.7813 | 1.4891 | 1.5651 | 1.4581 | 1.7074 | 0.6008 | 1.7569 | 1.7818 | 1.6022 | 1.7867 | 1.0783 | 0.8469 | 1.6912 | 1.4741 | 1.0846 | 1.1724 | 1.1869 | 1.4563 | 1.6618 | 1.4323 | 0.7795 | 1.2965 | 0.7656 | 1.5823 | 1.6255 |
| 13. பௌதீக விஞ்ஞானம் | 1.2884 | 1.0835 | 1.1742 | 0.9442 | 1.2069 | 0.4096 | 1.2412 | 1.2366 | 0.9998 | 1.2673 | 0.5221 | 0.5894 | 1.1684 | 1.0853 | 0.5652 | 0.8270 | 0.7911 | 0.9684 | 1.1801 | 0.9163 | 0.4024 | 0.8178 | 0.4053 | 1.0885 | 1.0825 |
| 14. நில அளவையியல் | 1.4235 | 1.3068 | 1.4941 | 1.3857 | 1.3862 | 0.4974 | 1.5192 | 1.4911 | 1.5204 | 1.5240 | 0.9118 | 0.4281 | 1.4806 | 1.2616 | 1.0546 | 1.1379 | 1.1557 | 1.3705 | 1.4859 | 1.3306 | 0.4447 | 1.2903 | 0.4762 | 1.2608 | 1.5073 |
| 15. பிரயோக விஞ்ஞானம் (பௌ. விஞ்) | 1.1825 | 1.0208 | 1.1034 | 0.8754 | 1.1624 | NQC | 1.1969 | 1.2017 | 0.9651 | 1.1890 | 0.5186 | NQC | 1.1433 | 1.0579 | 0.5138 | 0.7921 | 1.1266 | 0.9439 | 1.1361 | 0.8640 | NQC | 0.7786 | NQC | 1.0371 | 0.9961 |
| 16. முகாமைத்துவம் | 1.6103 | 1.5484 | 1.5479 | 1.3323 | 1.5220 | 1.2116 | 1.5696 | 1.6097 | 1.5279 | 1.5214 | 1.2942 | 1.1798 | 1.6352 | 1.3908 | 1.1861 | 1.1762 | 1.4359 | 1.3229 | 1.4914 | 1.3854 | 1.3224 | 1.3648 | 1.3335 | 1.5727 | 1.5131 |
| 17. பெருந்தோட்ட முகாமைத்துவம் | 1.5749 | 1.5390 | 1.5432 | 1.5478 | 1.5178 | 1.5142 | 1.5632 | 1.5696 | 1.5526 | 1.3983 | 1.1535 | 0.8778 | 1.3341 | 1.3744 | 1.3138 | 1.2300 | 1.4142 | 1.5526 | 1.4972 | 1.5125 | 1.1698 | 1.5437 | 1.3330 | 1.5649 | 1.5637 |
| 18. வர்த்தகம் | 1.4830 | 1.4755 | 1.4666 | 1.3399 | 1.4566 | 1.1540 | 1.4771 | 1.4808 | 1.4396 | 1.4202 | 1.1646 | 0.8931 | 1.4258 | 1.3798 | 1.0344 | 1.0992 | 1.3065 | 1.2457 | 1.4543 | 1.2923 | 1.2205 | 1.2759 | 1.2311 | 1.4773 | 1.4672 |
| 19. கலை | 1.2530 | 1.2300 | 1.2679 | 1.2679 | 1.2679 | 1.1691 | 1.2679 | 1.2679 | 1.2679 | 1.2679 | 1.2679 | 1.2340 | 1.2405 | 1.2405 | 1.2399 | 1.2679 | 1.2679 | 1.2679 | 1.2679 | 1.2679 | 1.1863 | 1.2679 | 1.2679 | 1.2679 | 1.2679 |
| 20. கலை (பொதுசன ஊடகவியல்) | NQC | 1.1799 | 1.1799 | NQC | 1.1799 | NQC | 1.1799 | 1.1799 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 1.1799 | 1.1799 | NQC | NQC | 1.1799 | 1.1799 | 1.1799 |
| 21. கலை (செயற்கலை) | 1.2046 | 1.2046 | 1.2046 | NQC | 1.2046 | NQC | 1.2046 | 1.2046 | 1.2046 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 1.2046 | NQC | NQC | 1.2046 | NQC | NQC | 1.2046 |
| 22. கலை (SAB) - A | 1.2611 | 1.2611 | 1.2611 | 1.2611 | 1.2611 | 1.2611 | 1.2611 | 1.2611 | 1.2611 | 1.2611 | 1.2611 | 1.2611 | 1.2273 | 1.2273 | NQC | 1.2611 | 1.2611 | 1.2611 | 1.2611 | 1.2611 | 1.2611 | 1.2611 | 1.2611 | 1.2611 | 1.2611 |
| 23. கலை (SAB) - B | 1.4054 | 1.4054 | 1.4054 | 1.4054 | 1.4054 | 1.4054 | 1.4054 | 1.4054 | 1.4054 | 1.4054 | 1.4054 | 1.4054 | NQC | NQC | NQC | 1.4054 | 1.4054 | 1.4054 | 1.4054 | 1.4054 | 1.4054 | 1.4054 | 1.4054 | 1.4054 | 1.4054 |
| 24. முகாமைத்துவக் கற்கை (SVT)-A | 1.4555 | 1.4413 | 1.4413 | 1.2981 | 1.4359 | 1.1228 | 1.4513 | 1.4572 | 1.4360 | 1.4137 | 1.1162 | 0.8837 | 1.4242 | 1.3598 | 1.1850 | 1.0752 | 1.2981 | 1.2252 | 1.4360 | 1.2864 | 1.1904 | 1.2706 | 1.2575 | 1.4413 | 1.4472 |
| 25. முகாமைத்துவக் கற்கை (SVT)-B | 1.4371 | 1.4302 | 1.4241 | 1.2923 | 1.4276 | 1.1116 | 1.4312 | 1.4360 | 1.4207 | 1.4054 | 1.2652 | 1.2007 | 1.3793 | 1.3541 | 1.1681 | 1.2597 | 1.2870 | 1.2160 | 1.4207 | 1.2570 | 1.1785 | 1.2386 | 1.2505 | 1.4355 | 1.4360 |
| 26. கட்டடக்கலை | 1.0993 | 0.7543 | 0.5529 | 0.6754 | 0.8778 | NQC | 1.0574 | 1.1650 | 0.7899 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.7392 | 0.7286 | 0.8649 | NQC | NQC | NQC | NQC | NQC |
| 27. வடிவமைப்பு | 1.0968 | 0.7211 | 0.4395 | NQC | 0.9058 | NQC | 1.0572 | 1.0916 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.8786 | 1.1558 | 0.4600 | NQC | NQC | NQC | 0.8860 | 0.6895 |
| 28. சட்டம் | 1.7764 | 1.7614 | 1.8023 | 1.7239 | 1.7522 | 1.4237 | 1.8105 | 1.7987 | 1.5723 | 1.5365 | 1.1249 | 1.6038 | 1.1649 | 1.4251 | 1.5108 | 1.5086 | 1.4443 | 1.7800 | 1.7584 | 1.6410 | 1.8251 | 1.6661 | 1.6260 | 1.6067 | 1.7547 |
| 29. தகவல் தொழில்நுட்பம் | 1.8058 | 1.5333 | 1.5395 | 1.3464 | 1.7095 | 0.6207 | 1.8196 | 1.7796 | 1.7256 | 1.7531 | 1.2923 | 0.7766 | NQC | 1.3620 | 1.1233 | 1.2332 | 1.3089 | 1.2938 | 1.6554 | 1.6043 | 0.8277 | 1.3285 | 0.7425 | 1.5069 | 1.7142 |
| 30. முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் | 1.5404 | 1.4072 | 1.2428 | 1.2821 | 1.4119 | NQC | 1.4579 | 1.5826 | 1.5997 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 1.2105 | NQC | 0.9798 | 1.4001 | 1.0673 | 0.5488 | 1.2771 | NQC | 1.3317 | 1.3907 |
| 31. பொது முகாமைத்துவம் (நிர்வாகம்) | 1.5997 | 1.5338 | 1.5432 | 1.5278 | 1.5437 | 1.5943 | 1.5643 | 1.5997 | 1.5232 | 1.4512 | 1.1127 | 0.8825 | 1.5873 | 1.3818 | 1.2679 | 1.1381 | 1.4312 | 1.3170 | 1.5737 | 1.5079 | 1.4054 | 1.5362 | 1.3330 | 1.5637 | 1.5485 |
| 32. தொடர்பாடல் கற்கை | 1.3024 | 1.3024 | 1.3024 | NQC | 1.3024 | NQC | 1.3024 | 1.3024 | 1.3024 | 1.3024 | NQC | 1.3024 | NQC | 1.1500 | NQC | NQC | NQC | NQC | 1.3024 | NQC | 1.3024 | NQC | NQC | 1.3024 | 1.3024 |
| 33. நகர் மற்றும் நாட்டுக்கான திட்டமிடல் | 1.5631 | 1.4006 | 1.4613 | 1.3135 | 1.5594 | 1.1181 | 1.6168 | 1.5562 | 1.4527 | 1.3736 | 0.5519 | NQC | - | - | - | 1.0131 | 1.3734 | 1.2158 | 1.5018 | 1.6193 | 0.9510 | 1.4287 | 0.9713 | 1.5199 | 1.3954 |

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஈ.பி.டி.பி. உறுப்பினர் மக்களிடம் சரணடைந்தார்

## நெடுந்தீவில் சம்பவம்

(தீவகம்)

கடந்த சனிக்கிழமை ஈ.பி.டி.பியின் ஆரம்ப உறுப்பினர் ஒருவர் நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்திடம் சரணடைந்துள்ளார்.

குணம் என்று அழைக்கப் படும் க.ராஜேந்திரன் (வயது 33) என்பவரே சரணடைந்தவராவார்.

1986 ஆம் ஆண்டு ஈ.பி.ஆர்.எல்.எப அமைப்பில் பயிற்சி பெற்ற இவர், 1990 ஆம் ஆண்டு தனது சொந்த இடமான வந்தாறுமூலைக்கு சென்று கொண்டிருந்தபோது ஈ.பி.டி.பியினரால் பலவந்தமாக சேர்க்கப்பட்டதாக நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்திடம் இவர் தெரிவித்துள்ளார்.

குடும்பவாழ்வில் இணைந்து இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையான குணம், கடந்த காலத்தில் செய்த தவறுகளை மன்னிக்குமாறும் கூறியதையடுத்து அவரது மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சம்பந்தப்பட்ட நபரின் வீட்டைக் கடந்த ஞாயிறு சுற்றி வளைத்த பொலிசாரும் ஈ.பி.டி.பி யினரும் குடும்பத்தினரை அச்சுறுத்தியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(112)

# பிரேத அறை நிர்மாண ஊழல்; செயலகத்தில் விசாரணைகள்!

## நிதியை மீளப்பெற நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனையில் பிரேத அறை அமைப்பதற்காக வழங்கப்பட்ட நிதியை மோசடி செய்த விவகாரம் சூடுபிடித்துள்ளது.

இவ்விவகாரம் குறித்து யாழ். செயலகத்தில் நேற்று ஆராயப்பட்டது. கட்டட ஒப்பந்தகாரரும் இதற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

யாழ். செயலக உயர் அதிகாரிகளும் புனர்வாழ்வு அமைச்சின் உயர் அதிகாரிகளும் மேற்படி விசாரணைக்காக யாழ். செயலகத்துக்கு வருகை தந்திருந்தனர்.

மேற்படி கட்டடம் தற்போது தேவையற்ற ஒன்றாகக் கருதப்படுவதால், குறித்த கட்டடப் பணி நிறுத்தப்பட்டு வழங்கப்பட்ட நிதியை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன்- குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய கட்டுமானப் பணிகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது. இந்த விவகாரங்கள் குறித்து விரிவான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு, புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

(க)

## கண்டியில் 14 கிலோ நிறையுடைய கிளைமோர் மீட்பு!

(கொழும்பு)

கண்டி கட்டுகஸ்தொட்ட பிரதான வீதியில் 14 கிலோ நிறையுடைய பாரிய கிளைமோர் குண்டு நேற்று மீட்கப்பட்டது.

கிளைமோர் குண்டின் வெளியுறையில் தமிழ்மொழியில் பெயர் காணப்பட்டது என்றும் -

இச்சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை-

நாரேஹேன்பிட்டி மங்கல மாவத்தையில் சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்களால் புகைக் குண்டு ஒன்றும், ரி.56 ரக ரவையும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பாகவும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(லி)

# பல்கலைக்கழக மாணவர் வாகனமறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முதல் வளாக வாகனங்களை மறியல் செய்யும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். எனினும் விரிவுரைகள் வழமைபோல் நடைபெறும் என மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. மாணவர்கள் விடுத்த சில கோரிக்கைகளை நிறைவேற்ற பல்கலைக்கழக நிர்வாகம் அசமந்தப் போக்கை காட்டுவதைக் கண்டித்தே இந்தப் போராட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை, இப்போராட்டம் தொடரும் எனவும் மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# தன்னைத்தானே சுட்டு அரியாலையில் சிப்பாய் பலி

(யாழ்ப்பாணம்)

அரியாலைப்பகுதியில் இராணுவ முகாமைச்சேர்ந்த சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

நேற்றுமுன்தினம் காலை அரியாலை கிழக்கில் நடைபெற்ற இச்சம்பவத்தில்- மாத்தறை மாவட்டத்தில் விபில மதகம என்ற இடத்தைச்சேர்ந்த டி.எம்.அபயக்கோன் பண்டா (வயது 21) என்பவரே தற்கொலை செய்துகொண்டவராவார்.

சம்பவதினம் காவலரணில் கடமையில் ஈடுபட்ட சமயம், ஏனைய சகாக்கள் உணவருந்த சென்ற போது- தனித்திருந்த இவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்திற்குச் சென்ற, யாழ். நீதவான் இ.த.விக்னராஜா விசாரணைகளை மேற்கொண்டார்.

(லி)

# தெற்கிலுள்ள மக்கள் சமஷ்டிக்கு ஆதரவு

## அமைச்சர் பி.தயாரத்ன

(கொழும்பு)

தெற்கிலுள்ள பெரும்பாலான மக்கள் சமஷ்டி முறையிலான தீர்வுக்கு ஆதரவு வழங்குவதாக அமைச்சர் பி.தயாரத்ன தெரிவித்துள்ளார்.

தெற்கிலுள்ள பெரும்பாலான மக்கள் சமஷ்டியை ஆதரிக்க, குறிப்பிட்ட சிறு தொகையினரான இனவாத சக்திகள் மட்டுமே இதனை எதிர்த்து வருகின்றனர்.

தென்பகுதி மக்கள் இப்போதுதான் சமாதானத்தின் பயனை அனுபவிக்கின்றனர். தமிழ் மக்களும் அச்சுறுத்தல் அற்ற வாழ்வை வாழ்கின்றனர். இடம்பெயர்ந்த மக்கள் மீளத் திரும்பமுடிகின்றது. பல வருடங்களாக பயிர் செய்யப்படாதிருந்த ஒரு லட்சம் ஹெக்ரயர் பரப்பளவு நிலத்தில் விவசாயம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

புலிகளும் அரசும் இப்பிரச்சினைக்கு அமைதியான தீர்வைக் காண அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

இனி யுத்தம் இல்லை என்ற நம்பிக்கை உறுதியாக ஏற்பட்டிருகின்றது. இரண்டு தரப்புக்களும் இணைந்து காணும் தீர்வு, எல்லா சமூகங்களாலும் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக அமையும் எனவும் அமைச்சர் பி.தயாரத்ன தெரிவித்துள்ளார்.

(க)

## நோர்வேயினை...

பேரணி ஜனாதிபதி மாளிகை வரை இடம்பெறவுள்ளதாகவும், முடிவில் ஜனாதிபதி சந்திரிகாவிடம், நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க்கை நாட்டைவிட்டு வெளியேற்றக் கோரும் மகஜர் வழங்கப்படும்.

இதேவேளை- நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் நேற்று முன் தினம் ஒஸ்லோவுக்கு புறப்பட்டுச் சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## Z புள்ளிகள்...

இதற்கமைய 41 பீடங்களுக்கு 12,054 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெறவுள்ளனர்.

மருத்துவ பீடத்துக்கு 891 மாணவர்களும், பொறியியல் பீடத்துக்கு 860 மாணவர்களும், முகாமைத்துவ பீடத்துக்கு 1607 மாணவர்களும், கலைப்பீடத்துக்கு 3091 மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர்.

## சமஷ்டிக்கான...

றும் மீள்குடியமர்வு உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் குறித்தும் தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் தீவிரமாக ஆராயப்பட இருப்பதாகவும் கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தாய்லாந்து 4 ஆம் கட்டப் பேச்சுவார்த்தையில் அரசின் சார்பில் ஏற்கனவே பங்குபற்றியவர்களே பங்குபற்றுவார்கள் என்றும், அமைச்சர் ஹக்கீமும் பங்குபற்றுவார் என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

## அரசியல் புகலிடம் நிராகரிக்கப்பட்டதால்

# அமெரிக்காவிலிருந்து வெளியேற ஈழத்தமிழ் டாக்டருக்கு உத்தரவு

(கொழும்பு)

அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் கோரிய ஈழத்தமிழ் டாக்டர் ஒரு வரை நாட்டில் இருந்து வெளியேறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஹட்கின்சனில் கடந்த எட்டு வருடங்களாகத் தங்கியிருந்த ஆனந்த நடேசன் என்ற டாக்டரும் அவரது குடும்பத்தினரும் நாடு கடத்தப்படவுள்ளனர். டாக்டரும் அவரது மனைவி மற்றும் இரு மகன்மாரும் 30 நாட்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேறிவிட வேணடும் என கடந்த 5ஆம் திகதி நீதிமன்றம் உத்தரவிட்டிருகின்றது.

1980 ஆம் ஆண்டில் பிரிட்டனில் குடியேறிய டாக்டர், பின்னர் 1984 இல் அமெரிக்காவின் ஹட்சின்சனில் குடியேறினார். அங்கு அரசியல் தஞ்சம் கோரி அதிகாரிகளிடம் மனுச்செய்திருந்தார்.

டாக்டர் வைத்தியசாலை ஒன்றில் பணிபுரிந்ததுடன், அவரது மனைவியும் தாதியாகப் பணியாற்றினார். இரு மகள்களும் பல்கலைக் கழகங்களில் கல்விகற்று வந்தனர்.

1993 இல் அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் கோரிய டாக்டர் ஆனந்த நடேசன் குடும்பத்தினரின் அரசியல் தஞ்சக் கோரிக்கை 1999 இல் விசாரணை செய்யப்பட்டது.

இந்த நிலையில் அரசியல் புகலிடம் கோருவதற்கு போதிய ஆதாரங்களைச் சமர்ப்பிக்காமையினால், கடந்த டிசம்பர் 5ஆம் திகதி, நீதிமன்றம்- 30 நாட்களுக்குள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமென டாக்டர் குடும்பத்தினரைப் பணித்துள்ளது.

அதேவேளை, தமக்கு மேலும் 30 நாட்கள் காலஅவகாசம் தேவையென கோரிக்கை விடுத்துள்ளதுடன், தாம் ஒருபோதும் இலங்கைக்குத் திரும்பப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஏ-9 வீதி புனரமைப்புக்கு...

அதிகார சபையின் தலைவர் கே.எம்.பி. விஜயவர்த்தனா ஆகியோர் மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். நேற்றைய வைபவத்தில் விடுதலைப் புலிகளின் நிர்வாக சேவைத் துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன் மற்றும் கிளிநொச்சி அரச அதிபர், வவுனியா மாவட்ட அரச அதிபர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இத்திருத்த வேலைகளை மேற்கொள்வதற்காக, ஏ-9 கண்டி வீதி எட்டுக் கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறான எட்டு ஒப்பந்தகாரர்களிடம் திருத்த வேலைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி எட்டு ஒப்பந்தக்காரருடனும் தனித்தனியான ஒப்பந்தங்களும் நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளன. ஜனவரி மாதம் முதல் வாரத்தில் திருத்த வேலைகள் அனைத்தும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்காக கொழும்பிலிருந்து கனரக இயந்திரங்களும் எடுத்துவரப்படவுள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் இராஜநாயகம் நேற்று நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

## திருமதி வைரமுத்து மகேஸ்வரி

"மகேஸ்தான்" வதிரி கரவெட்டியை பிறப்பிடமாகவும் சாத்திரியார்வளவு அல்வாய் வடக்கு அல்வாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வைரமுத்து மகேஸ்வரி 23.12.2002. திங்கட்கிழமை காலமானார். அன்னார் வைரமுத்துவின் அன்பு மனைவியும் சபாணந்தராஜா (லண்டன்), ரவீந்திரராஜா (லண்டன்) ஆகியோரின் தாயாரும், ஜெயராணி, சாரதாதேவி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், ராஷ்மி, ராஜிகா, தருண் (லண்டன்), திஸன் (லண்டன்), ஆகியோரின் பேத்தியுமாவார். இவரது இறுதிக் கிரியைகள் 23.12.2002. (திங்கட்கிழமை) இடம்பெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

*அல்வாய் வடக்கு,*
*அல்வாய்.*

(சி-351)

தகவல்:-
ரவீந்திரராஜா (மகன்)

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரு.ச.) | விற்பனை விலை (ரு.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.43 | 96.88 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 154.27 | 155.65 |
| 1 யூரோ | 98.65 | 99.83 |
| 1 சுவிஸ் பிராங் | 67.39 | 68.44 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 53.87 | 54.84 |
| 1 ஜப்பானிய யென் | 00.79 | 00.80 |
| 1 சவூதி றியால் | 25.79 | 25.79 |

சலூன் தேவைக்கான
பேரம் (Bayrom), ஆப்ர சேவ் (After shave)
விசேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ள
சந்தியா மல்ரி கோட்யார்ட்
531, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(070)
பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.

SUPER GRADE - 6
தரம் 5 புலமைப்பரிசில் - 2002
பரீட்சையில் சித்தியடைந்த
மாணவர்களுக்கு மட்டும் புதிய
தரம் -6 SUPER GRADE
பிரிவு ஆரம்பம் - 02.01.2003
(பி.ப.4 மணி)
30 மாணவர் மட்டும் இணையலாம்
தரம் 4 முதல் O/L வரை இவ்விரண்டு பிரிவுகளுடன் இன்னும் சில அனுமதிகள் வழங்கப்படும்.
இறுதிநாள் 05.01.2002
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
(நல்லூர் கோயில் முன்பாக)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.